
ஒரு பெண்ணின்
இன்ப
அனுபவங்கள்
ப்ரியா

www.anybook.in

ஒரு பெண்ணின் இன்ப அனுபவங்கள்

'ப்ரியா'

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559
email:- enquiry@thirumagalnilayam.com
website:- www.thirumagalnilayam.com

www.indianguide.in

முதற் பதிப்பு	:	டிசம்பர், 1986
இரண்டாம் பதிப்பு	:	ஆகஸ்ட், 1990
மூன்றாம் பதிப்பு	:	ஏப்ரல், 1997
நான்காம் பதிப்பு	:	ஏப்ரல், 2000
ஐந்தாம் பதிப்பு	:	ஜனவரி, 2004
ஆறாம் பதிப்பு	:	டிசம்பர், 2009

© : ஆசிரியருக்கு

திருமகள் நிலையம் வெளியீடு

TITLE	:	ORU PENNIN INBA ANUBAVANGAL
AUTHOR	:	PRIYA
SIXTH EDITION	:	DECEMBER - 2009
PAPER	:	11.6 Cream Wove
TOTAL PAGES	:	88

Available at :

THIRUMAGAL NILAYAM
16/55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
Fax : 91-44-24341559

விலை ரூ. 32/-

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Typesetting : AMARAVATHI GRAPHICS
Chennai - 33. Cell : 9444169725
Printed by : மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

www.indianguide.in

www.anybook.in

முன்னுரை

அன்புச்சகோதரியே,

'ஒரு பெண்ணின் இன்ப அனுபவங்கள்' என்கிற இந்தப் புத்தகம் நான் எழுதுகிற இரண்டாவது புத்தகம். செக்ஸ் தகவல்களைக் கொடுக்கும் புத்தகங்கள் 'ஆபாச புத்தகங்கள்' என்று சிலர் கருதிய காலம் ஒன்று இருந்தது. இப்போதெல்லாம் பள்ளிக் கூடங்களிலேயே வயதுவந்த மாணவர்களுக்கு செக்ஸ் அறிவு புகட்ட வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கி வருகிறது.

நான் முன்னர் எழுதிய 'ஒரு பெண்ணின் அந்தரங்கக் குறிப்புகள்' என்கிற புத்தகத்தின் தொடர்ச்சியாகவே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறேன். ஆனால், இரண்டையும் சேர்த்துத்தான் படிக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. தனித்தனியாகவும் படித்து மகிழலாம்.

இந்தப் புத்தகத்தில் எனக்கேற்பட்ட சில அனுவங்களை மனம் விட்டுச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய அனுபவங்கள், நீங்கள் அனுபவிக்க விரும்பும் வாழ்க்கை இன்பத்துக்கும் வழிகாட்டும் என நம்புகிறேன்.

www.indianguide.in

இதையடுத்து 'ஒரு பெண்ணின் ரகசிய ஆலோசனைகள்' என்கிற என்னுடைய புத்தகமும் வெளி வருகிறது. அனைத்துப் புத்தகங்களும் உங்களுக்கு மகிழ்ச்சியும் இன்பமும் ஊட்டக்கூடியவை என்கிற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புள்ள
ப்ரியா

★★★



www.anybook.in

ஒரு பெண்ணின் இன்ப அனுபவங்கள்!

1. நீங்கள் விரும்புவது

அன்புச் சகோதரிகளுக்கென்று ''ஒரு பெண்ணின் அந்தரங்கக் குறிப்புகள்'' என்கிற தலைப்பில் நான் எழுதிய புத்தகத்தைப் பாராட்டிப் பெண்கள் மட்டுமின்றி ஆண்களிலும் பலர் எனக்குக் கடிதமெழுதியுள்ளார்கள். பொதுவாக செக்ஸ் பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணங்களில் பெரிய மாற்றத்தையே நான் உண்டாக்கி விட்டதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர், ''உங்கள் செக்ஸ் அனுபவங்களை மிகவும் மனம் திறந்து ஒளிவுமறைவின்றிச் சொல்லி யிருக்கிறீர்கள் எனப் பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் பாராட்டுதல்கள் என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கினாலும் என்னுடைய செக்ஸ் அனுபவங்கள் அனைத்தையும் அந்தப் புத்தகத்தில் நான் சொல்லிவிட்டதாக நினைக்கவில்லை. பொதுவாகவே செக்ஸ் அனுபவங்களுக்கு இதுதான் எல்லை என்று வகுத்துச் சொல்வது கஷ்டம்.

www.indianguide.in

www.anybook.in

பலர் வெட்கத்தின் காரணமாக, செக்ஸ் இன்பத்தை முழுமையாக அனுபவிக்க தவறிவிடுவார்கள். அப்படிப் பட்டவர்கள் அந்தப் போலிதனத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே என்னுடைய அந்தரங்க அனுபவங்களை மனம்விட்டு நான் சொல்கிறேன்.

முதல் புத்தகத்தை நான் எழுதிய பிறகு எனக்குப் பல தோழிகள்கிடைத்திருக்கிறார்களென்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என் முதல் புத்தகத்தை படித்து விட்டதால், தங்களின் செக்ஸ் பிரச்சினைகளை என்னிடம் அவர்கள் கூச்சமின்றி விவாதிக்கிறார்கள். இந்த விவாதங் களின்போது நான் அறிந்திராத பல செக்ஸ் அனுபவங்களை அவர்கள் மூலம் தெரிந்துகொள்வதற்கும் அது எனக்கு வாய்ப்பாகிவிடுகிறது.

நானும் என்னுடைய அனுபவங்களையும், பிறர்மூலம் அறிந்த அனுபவங்களையும் உங்களுக்குத் தொடர்ந்து சொல்லலாமென்றிருக்கிறேன். இப்போதெல்லாம் நான்கூட அரசியல், சமூகப் பிரச்சினைகளைதுணிந்து விவாதிப்பதைப் போல் செக்ஸ் பிரச்சினைகளையும் மற்றவர்களுடன் விவாதிக்கத் தொடங்கியிருக்கிறேன். இதனால் ஆண்களிலும் எனக்குப் பல நண்பர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர் இந்திரஜித் என்பவர். இவர் பலே கில்லாடி. அழகான வாலிப மிடுக்கோடு கூடிய தோற்றமுடையவர். பெண்களைக் கவர்ந்து தன்வயப் படுத்துவதில் கைதேர்ந்த நிபுணர். இவர் சொல்லிய அனுபவங்களை இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகச் சொல்கிறேன். ஆங்கில இலக்கியத்தில் கேஸனோவா என்பவர் ஒரு சிரஞ்சீவி செக்ஸ் கதாபாத்திரம். இவர் பெண்களோடு செய்யாத லீலைகளில்லை. அனைத்தும்

www.indianguide.in

www.anybook.in

படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பச் செய்திகள். இந்திரஜித்தின் அனுபவங்கள் அனைத்தையும் இந்தப் புத்தகத்தில் நான் சொல்லப் போவதில்லை. அடுத்து அவருடைய அனுபவங்களைத்தான் புத்தகங்களாக எழுதவிருக்கிறேன்.

இப்புத்தகத்தில் எனக்கேற்பட்ட இன்ப அனுபவங்களை என்னுடைய வாசகர்களோடு பகிர்ந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். என்னுடைய முதல் புத்தகத்தில் என் கணவருக்கிருந்த செக்ஸ் பலவீனங்களைப் பற்றியும் அவற்றை நிவர்த்திப்பதற்கு நான் மேற்கொண்ட இன்ப விளையாட்டுகள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஆரம்பத்தில்தான் அவரும் அறியாப்பிள்ளை போல இருந்தார். அப்புறம் ரொம்பவும் தேறிவிட்டார். அவரே பல விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுக்கவும் ஆரம்பித்து விட்டார். அலுவலகத்துக்குச் சென்ற நேரம். போக, பாக்கி நேரங்களிலெல்லாம் பெரும்பாலும் செக்ஸ் விஷயங்களைப் பேசுவதிலேயே பொழுதைப் போக்கலானார்.

அதுமட்டுமல்ல, செக்ஸ் சுவையூட்டும் கதைகள், செக்ஸ் பற்றி வெளிவரும் புத்தகங்கள், ஆல்பங்கள் ஆகியவற்றைச் சேகரிப்பதையே தன்னுடைய பொழுது போக்காகவும் ஆக்கிக் கொண்டார். இருவரும் அதை ஒன்றாகச் சேர்ந்தே படிப்போம். படங்களைப் பார்த்து ரசிப்போம். சில சமயங்களில் அதன் விளைவாக இருவருமே உணர்ச்சியால் உந்தப்பட்டு எந்தவிதமான கூச்சமுமின்றி செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடத் தொடங்கிவிடுவோம். இதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாய் இருக்கிறதா? அப்படித் தோன்றினால் செக்ஸ் பற்றி ஆரோக்கியமான முடிவுகளுக்கு நீங்கள் வரவில்லையென்று தான் சொல்லுவேன்.

www.indianguide.in

www.anybook.in

ஒரு ஆண் உடுத்தியிருக்கும் உடையைப் பெண் ரசிக்கிறாள். பெண் அணிந்திருக்கும் உடை ரசிக்கும்படி யாகயிருந்தால் ஆண் அதைப் பாராட்டிப் பேசுகிறான். இதில் தவறேதும் இருப்பதாக நாம் கருதுவதில்லை.

இன்ன பதார்த்தம் எனக்குப் பிடிக்கும், சமைத்துப் போடு என்று மனைவியிடம் கணவன் சொல்லுகிறான். 'இன்ன ஓட்டலில் நீங்கள் வாங்கி வந்த ஸ்வீட் நன்றாக இருந்தது. நாளைக்கு அலுவலகத்திலிருந்து வரும்போது மறக்காமல் வாங்கி வாருங்கள்' என்று கணவரிடம் மனைவி கேட்டுக் கொள்கிறாள். இதைச் சாதாரண விஷயமாகத்தான் நாம் எடுத்துக் கொள்கிறோம்.

ஆனால், செக்ஸ் என்று வரும்போது ஆயிரம் தயக்கம் நமக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஒரு பெண் நிர்வாணக் கோலத்தில் இருப்பதை ஆபாசமாகக் கருதலாம். கணவன் முன்னிலையில் அவள் அப்படிக் காட்சி தருவது எவ்வாறு ஆபாசமானதென்று எனக்கு விளங்கவில்லை.

கணவனின் முன்னிலையில் பிறந்தமேனியோடு மனைவி நிற்கும்போது, அவன் அந்த அழகை எப்படியெல்லாம் ரசிப்பானென்பது அனுபவித்தவர்களுக்கு மாத்திரம்தான் தெரியும். இயற்கை, பெண்ணின் அவயவங்கள் அனைத்தையும் கவர்ச்சிப் படைப்பாகவே ஆக்கி வைத்திருக்கிறது.

அவளுடைய மார்பகங்கள் எழில் கலசங்களைப் போல ஆணை மயக்குகின்றன. தொடைகளின் வாளிப்பிலும் அதற்கிடையேயுள்ள அழகு முக்கோணத்திலும் செறிந்து கிடக்கும் அழகை ஓர் ஆண் ரசிப்பதைவிடப் பெண்ணுக்கு வேறென்ன பெருமை வேண்டும்.

அவ்வாறு ரசிக்கிற ஆண்கள்கூட அந்த ரசனையை வார்த்தைகளால் சொல்லத் தயங்குவார்கள். இந்த தயக்கத்தைத் தான் அர்த்தமில்லாதது என்று நான் குறிப்பிடுகிறேன்.

www.indianguide.in

www.anybook.in

உன் சமையல் நன்றாக இருக்கிறது என்று சொல்கின்ற கணவன், இந்தச் சேலை உனக்குக் கவர்ச்சியாயிருக்கிறது என்று வர்ணிக்கின்ற கணவன், படுக்கையறைத் தனிமையில் மனைவியின் அழகை ரசித்து வர்ணிப்பதில் என்ன குடி முழுகிப் போய்விடுமென்று நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்!

ரசிக்கிறான், வார்த்தைகளால் சொல்லத் தயங்குகிறான் இதைத்தான் வேண்டாமென்கிறேன் நான், அவ்வாறு கணவன் சொல்லும்போது மனைவி எத்தகைய மகிழ்ச்சிக் குள்ளாவாளென்பது பவருக்குத் தெரிவதேயில்லை. இந்த வர்ணனையை அவள் கேட்கும்போது அவளுடைய உள்ளம் மகிழ்ச்சியில் விம்மிப்புடைகிறது. உள்ளம் மட்டுமா புடைக் கிறது? அவளுடைய மார்புக் கலசங்களும் கூடகாம இச்சையால் விம்மிப் புடைக்கும். தொடைகள் மதர்த்து எழும்.

உணர்ச்சிக்கு மிகுதியான சக்தி உண்டு. கணவன் தன் அழகை வர்ணிக்க வர்ணிக்க, அந்த அழகுப் பகுதிகளை அவன் தீண்டி மகிழமாட்டானா என அவளுடைய உள்ளம் ஏங்கித் தவிக்கும். கலவிக்கு ஒரு பெண்ணைத் தயாராக்கு வதற்கு இதைவிடச் சிறந்த வழி வேறில்லை.

ஏதோ நான் சொல்லத் தகாத விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேனோ என்று நீங்கள் மிரள வேண்டிய தில்லை. சீதை ராமனின் மனைவி, அவளையே கம்பன் அங்கம் அங்கமாக வர்ணிக்கிறான். இன்னொருவன் மனைவியை வர்ணிக்கின்ற உரிமை கவிக்கு உண்டென்று இலக்கியத்தில் நாம் ஒப்புக்கொள்கிறோம்.

அதையே ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு ஒரு கணவன் தன் மனைவியை, படுக்கையறைத் தனிமையில் அங்கம் அங்கமாக வர்ணிப்பது எப்படித் தவறாகுமென்று நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்.

www.indianguide.in

www.anybook.in

விஸ்வாமித்திரர் இராம - லட்சுமணர்களை அழைத்துக் கொண்டு மிதிலை நகருக்குள் பிரவேசிக்கிறார். கன்னி மாடத்திலிருந்த சீதையை ராமன் பார்க்கிறான், ராமனை சீதையும் பார்க்கிறாள். கண்ணோடு கண்ணை கவ்வின என்று கம்பர் வர்ணிக்கிறார். அத்தோடு அவர் நிறுத்திக் கொள்ள வில்லை. இராமனின் விழிகள் எதைப் பார்த்தன, சீதையின் விழிகள் எதைப் பார்த்தன என்றும் வர்ணிக்கிறார்.

சீதையின் பார்வை இராமனின் அகண்ட தோள்களில் சென்று தங்கின எனச் சொல்லும் கம்பர், ராமனின் பார்வை சீதையின் முலைகளில் சென்று தைத்தன எனக்குறிப்பிடுகிறார்.

தைத்தன என்று சொன்னால் அங்கிருந்து மீளவில்லை யென்று அர்த்தம். அதாவது ராமன் சீதையின் மார்பழகில் மீள முடியாமல் லயித்துப் போய் விடுகிறான். அதாவது அந்த அவயங்களின் அழகு ராமனை மீள முடியாமல் சிக்க வைத்து விடுகிறது.

சீதையின் பார்வை ராமனின் தோள்கள் மீது தங்கி விடுகிறது, அதாவது ஒரு பெண் பெறுகின்ற மிகப் பெரிய ஸ்பரிச இன்பம் அவனுடைய அணைப்பில்தான் கிடைக்கும். அகன்ற தோள்களென்றால் அணைப்பும் சற்று உறுதியாகத் தானிருக்கும்.

இங்கே மிகப் பெரிய செக்ஸ் உண்மையை கம்பன் வெகு அருமையாக வெளிப்படுத்துகிறான். சீதையின் மார்பழகில் லயித்த இராமனுக்கு, அதை அணைக்க வேண்டுமென்கிற துடிப்பு. சீதைக்குத் தனது மார்பகங்கள் ராமனின் அணைப்புக்குள் அகப்பட்டுக் குழைய வேண்டும் என்கிற ஆசை.

இரண்டையும் பார்வையை மையாக வைத்துக் கம்பர் அழகாக எடுத்துக்காட்டி விடுகிறார். இராமனும் சீதையும்

www.indianguide.in

www.anybook.in

தனிமையில் சந்திக்க நேரும்போது இதையெல்லாம் பேசி மகிழ்ந்தார்களா இல்லையா என்று கம்பன் சொல்லவில்லை.

பிரச்சினை அதுவல்ல, இன்னொருவன் மனைவியின் அங்க அழகை வர்ணிக்கும் உரிமை கம்பனுக்கு இருந்தது. அந்த உரிமை, மனைவியின் அங்க அழகை வர்ணிக்க கணவனுக்கு இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி?

இளங்கோவடிகள் துறவி, கண்ணகியின் முலைகளை வர்ணிக்கும்போது, முதிரா முலைகள் என்று வர்ணிக்கிறார். அவ்வாறு அவர் ஏன் வருணிக்க வேண்டும்? கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்து கொண்டு நீண்ட நாட்கள் அவளோடு வாழவில்லை. மாதவியை நாடிச் சென்று விட்டான். அவன் அவளுடைய முலைகளைத் தொட்டு அனுபவித்திருந்தால் அது முதிர்ந்திருக்கும். அவன் நீண்ட நாள் மனைவியோடு வாழவில்லையென்பதை முதிரா முலை என்கிற சொற்றொடர்மூலம் இளங்கோவடிகள்உணர்த்துகிறார்.

நம்முடைய பண்டைய இலக்கியத்தில் துறவிகளாக வாழ்ந்த கவிஞர்கள்கூட இதையெல்லாம் பச்சையாகவே சொல்லியிருக்கிறார்களென்றால், அவர்கள் ஆபாசத்துக்கு அடிமையாகி விட்டார்களென்று அர்த்தமில்லை.

செக்ஸ் என்பதை வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாக ஏற்றுக்கொள்ள முதலில் நாம் பழகிக்கொள்ள வேண்டும். அது பற்றிய தயக்க உணர்ச்சிகளை விட்டொழிக்கும்போது, அதுவே ஒரு வாழ்க்கைப் பேரின்பமாக மலர்ச்சியடையும்.

ஆரம்பத்தில் நான் என் கணவரின் குறைபாடுகளைப் போக்கி, செக்ஸ் என்பது அனுபவிக்கத்தக்க விஷயம் என்கிற உணர்ச்சிகளையும் அவரிடம் ஏற்படுத்திவிட்ட பிறகு அவரும் ஒரு கேஸனோவாக மாறி, எல்லையில்லாத இன்பத்தில் நான் நீந்தித் திளைக்கும் காரியங்களைச் செய்ய தொடங்கிவிட்டார்.

www.indianguide.in

www.anybook.in

என்னுடைய நிர்வாண அழகை அவர் ரசிப்பதும், அவருடைய நிர்வாண அழகை நான் ரசிப்பதும் எங்களுக்குள் சர்வ சாதாரண விஷயங்களாகிவிட்டன. ஒரு சமயம் கலவி முடிந்த பிறகு அதில் நான் பெற்ற சுகத்தை. எண்ணி மகிழ்ந்திருக்கையில், திடீரென்று நான் உணர்ச்சிவசப்பட்டு அவருடைய ஆண்மைச் சின்னத்துக்கு மாறி மாறி முத்தம் கொடுத்தேன்.

உடனே அவர், ''லேடி சாட்டர்லியின் காதலன் என்கிற ஆங்கில நாவலை நீ படித்திருக்கிறாயா?'' எனக் கேட்டார்.

அம்மாதிரி நாவல்களை நானா படிக்காமல் விடுவேன். ஆனாலும் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை தெரிந்துகொள்வதற்காகப், 'படிக்கவில்லையே. அந்த நாவலுக்கும் நான் இப்போது செய்வதற்கும் என்ன சம்பந்தம்' என்று அவரைப் பார்த்துக் கேட்டேன் அப்பாவித்தனமாக.

அவருக்குக் குஷி பிறந்துவிட்டது. ஆர்வத்தோடு எழுந்து உட்கார்ந்து அந்த நாவலை விமரிசிக்க ஆரம்பித்து விட்டார். அது இங்கிலாந்திலேயே மிகவும் சர்ச்சைக்குள்ளான நாவல் D.H. லாரென்ஸ் என்கிற பிரபல ஆங்கில நாவலாசிரியர் எழுதிய நாவல். செக்ஸ் அனுபவங்களைச் சுவையாக வர்ணிக்கின்ற நாவல்.

சரியான விருந்து காத்திருக்கிறது என்கிற ஆர்வத்தோடு நானும் எழுந்து உட்கார்ந்தேன். லேடி சாட்டர்லிக்கு ஏற்பட்ட சுவையான செக்ஸ் அனுபவங்களை அன்று நாங்களிருவரும் பேசி ரசித்தோம்.

லேடி சாட்டர்லி உண்மையிலேயே காமவெறி பிடித்த பெண்ணா? சுவையான கேள்வி. செக்ஸ் இன்பம் பெற இரவெல்லாம் விரும்புவோர் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

www.indianguide.in

www.anybook.in

2. ஒரு சீமாட்டியின் செக்ஸ் அனுபவம்!

லேடி சாட்டர்லியின் கதை எனக்கு தெரிந்திருந்தாலும் என் கணவர் சொல்லிக் கேட்பதில் ஒரு சுகம் இருக்கவே செய்தது. லார்டு சாட்டர்லியின் மனைவி லேடி சாட்டர்லி, அழகி. கணவனுக்கு விசுவாசமாகத்தானிருக்கிறார். ஆனால், திடீரென்று கணவன் வாத நோயால் பீடிக்கப்பட்டுச் செயலிழந்து போகிறான். லேடி சாட்டர்லியின் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்துக் கொள்ளும் மெல்லர்ஸ் என்கிற பெயருள்ள ஒரு தோட்டக்காரன் இருக்கிறான். அவனோடு லேடி சார்ட்டலிக்குத் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது உண்மையான செக்ஸ் இன்பம் என்ன என்பதை அவனிடம் தான் அவள் அறிந்து கொள்கிறாள். இதுதான் கதையின் சாரம்.

ஆனால், இந்தக் கதை செக்ஸ் சிந்தனையில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தியதாகச் சிலர் கருதினார்கள். வேறு சிலர், அருமையான ஆங்கில உரைநடை எழுதும் லாரன்ஸ், ஒரு ஆபாசத்தை இலக்கியம் என்கிற பெயரில் கொடுத்திருக்கிறார் என்று குற்றம் சாட்டினார்கள். நாவலும் தடை செய்யப் பட்டது. அதனாலேயே உலகெங்கும் அது பெரிய பரபரப்பினை ஏற்படுத்தியது.

அந்த நாவலில் லேடி சாட்டர்லி, மெல்லர்ஸுடன் கொள்ளுகின்ற உடலுறவை, லாரன்ஸ் பச்சையாகவே வர்ணித்திருக்கிறார்.

என் கணவர் சொன்னார். ''மெல்லர்ஸோடு முதலில் உடலுறவு கொள்ளத் தயங்குகிறாள் லேடி சாட்டர்லி. காரணம், அவள் சீமாட்டி. அவனோ ஒரு தோட்டக்காரன். தகுதி அடிப்படையில் இரண்டு பேருக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ளவித்தியாசம். ஆனால், மெல்லர்ஸிடம் இருந்த ஏதோ ஒரு ஆண்மைக் கவர்ச்சியால் அவள் முதலில் ஈர்க்கப்படுகிறாள்.

www.indianguide.in

www.anybook.in

பிறகு அவனிடம் சுகமனுபவித்த பிறகு அவனுடைய ஆண் குறியை வழிபாட்டுக்குரிய தெய்வமாகவே எண்ணிப் போற்றுகிறாள். நீ என்ன நினைக்கிறாய்?'' எனக் கேட்டார் என் கணவர்.

''நான் உறங்குகின்ற தெய்வத்துக்கே உணர்ச்சியை ஏற்படுத்தியவளல்லா எனச் சொல்லிச் சிரித்தேன்.'' (விவரம் முதல் புத்தகத்தில்).

''போடி போக்கிரி, இன்னும் நீ பழசை மறக்கவில்லை போல இருக்கிறது'' என்றார் அவர் செல்லமாக.

''ஓஹோ! அதனால்தான், நான் முத்தமிட்டவுடன் அந்த நாவல் உங்கள் நினைவிற்கு வந்ததோ'' என்று திரும்பிக் கேட்டேன்.

''ஆமாம். உடலுறவு முடிந்து களைத்துப்போயிருக்கும் லேடி சாட்டர்லி, மெல்லர்ஸின் ஆண்குறியைக் கையிலெடுத்து முத்தமிட்டதாக லாரன்ஸ் எழுதியிருக்கிறார், அதாவது செக்ஸ் என்பது உன்னதமாள விஷயம். அதில் பங்கேற்கும் உறுப்புகூடப் போற்றுவதற்குரியதாகி விடுகிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலம் லாரன்ஸ் உணர்த்த முயற்சிக்கிறார்.

ஆமாம், இதில் ஆபாசம் என்ன இருக்கிறது?

''செய்தால் ஆபாசமில்லை, சொன்னால்தான் ஆபாசம்'' என்று சொல்லிச் சிரித்தார் என் கணவர்.

''ஆண்குறி வழிபாடு (Phallua worship) உலகமெங்குமே பண்டைக் காலத்திருந்ததாகப் படித்திருக்கிறேன் என்றேன் நான்.''

''நீதான் இதில் பெரிய ஆதார மேதையாயிற்றே, இந்த விஷயத்தில் என் கண்களைத் திறந்து விட்டவளே நீ தானே.''

www.indianguide.in

www.anybook.in

''ஆமாம். அது கிடக்கட்டும் சித்தார்த்தா என்றொரு சினிமாப் படம் வந்ததே, நீங்கள் பார்த்தீர்களா?''

''அந்தப் படத்துக்கும் நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கும் விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''சிமி காரிவாலும் சசிகபூரும் நடித்த படம் அது. ஞானத்தை தேடி அலைகிற ஒருவன், முடிவில் எல்லாம் பெண்குறிக்குள் அடக்கமாயிருப்பதை உணர்ந்து அதை வணங்கி ஏற்பதாகக் கதை.''

''அடடே! உன் விஷயம்தான் பெரியது என்று ஸ்தாபிக்க விரும்புகிறாய்.''

''இந்தக் குறும்புதானே வேண்டாம். நீங்கள் லேடி சாட்டர்லியின் கதையைச் சொன்னீர்கள். நான் சித்தார்த்தா கதையைச் சொன்னேன்.''

எந்தக் கதையானாலும் ஆணும் பெண்ணும் இணையாமல், சித்தார்த்தாவும் ஒன்றுதான், லேடி சாட்டர்லியும் ஒன்றுதான்' என்று சொன்ன என் கணவர் அந்தக் கதையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, தன்னைச் சித்தார்த்தா ஆக்கிக் கொண்டு என்னையும் நிர்வாணமாக்கி யோனி வழிபாட்டை ஆரம்பித்துவிட்டார்.

நானும் அவரை மெல்லர்ஸாக நினைத்துக்கொண்டு, என்னை லேடி சாட்டர்லியாக்கிக் கொண்டேன். மனித மனம் இருக்கிறதே அது கொஞ்சம் வேடிக்கையானது. கணவனும் மனைவியும் தனிமையிலிருக்கும்போது எப்படி வேண்டுமானாலும் இருக்க முடியும். சில இளந்தம்பதிகள் வெளியில் வரும்போதுதான் ஒருவரையொருவர் சீண்டி மகிழ்ந்து கொள்வார்கள். பொது இடங்களில் ஒருவருக்கும் தெரியாமல் முத்தமிட்டுக் கொள்வதில் ஒரு தனி குஷி.

www.indianguide.in

www.anybook.in

இந்த எண்ணம் ஏன் ஏற்படுகிறது எனச் சில சமயம் நான் யோசித்துப் பார்ப்பதுண்டு. ஆனால், எனக்கே சில சமயங்களில் அம்மாதிரி ஆசை ஏற்பட்டு நடந்து கொண்டு இருக்கிறேன். இதற்குக் காரணம் எனக்கு மெல்ல மெல்ல விளங்க ஆரம்பித்தது. நமக்கு உடைமையான ஒன்றை நம்முடையது என்று காட்டிக் கொள்ள விரும்புவதில்லையா? அதே விவகாரம்தான் இதுவும். மற்றவர்கள் முன்னிலையில் மனைவியை அணைத்துச் சொந்தம் கொண்டாட முயல்கிறான் கணவன். கணவனின் கைகளை தழுவி தனது அன்னியோன்னியத்தை வெளிப்படுத்த விரும்புகிறாள் மனைவி.

அதுவும் நம்முடைய நாட்டில் செக்ஸ் உறவுகள் பரம ரகசியமாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். நினைப்புத்தான் அப்படி. ஆனால், உணர்ச்சிகளோ வேறு மாதிரி. பலர் முன்னிலையில் ஆணும் பெண்ணும் தொட்டு மகிழ்வதும் உரசி இன்பம் காண்பதும் சமூகக் கட்டுப்பாட்டை உடைத்தெறியும் மனோபாவ வெளிப்பாடுகளே.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அன்று இரவு என் கணவருக்கு ஏற்பட்ட ஆசை எனக்கே கொஞ்சம் வேடிக்கையாகக்கூட இருந்தது. இப்போதெல்லாம் நான் அவரை உசுப்ப வேண்டிய அவசியமேயில்லை, அவருடைய ஆண்மைச் சக்தி நிரூபிக்கப்பட்ட விஷயமாகி விட்டது. அந்த துணிச்சலில் அவர் பலவிதமான செக்ஸ் பரிசோதனைகளில் தாராளமாகவே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

எனக்கு மட்டுமென்ன, கசக்கவா போகிறது? லேடி சாட்டர்லியின் கதையை நாங்கள் பேசியது இருவரிடையேயும் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டதென்னவோ உண்மை.

ஆனால், நானும் அவரும் நிர்வாணக் கோலமாகி விட்ட நிலையில், மின்வெட்டுப் போல அவருக்குப் புதிய

www.indianguide.in

www.anybook.in

ஐடியா தோன்றிவிட்டது. என்னைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு பாத்ரூமுக்கு சென்றார். ஏற்கெனவே திட்டமிட்டு கெய்சரைத் திருப்பி ஷவரில் வெந்நீரும் வர ஏற்பாடு செய்திருக்கிறார்.

நானும் அவரும் ஷவரின் அடியில் நிற்க, வெந்நீர் பூப்போல எங்கள் உடலில் விழுந்த முத்துக்களாகச் சிதறத் தொடங்கியது. அழகை ரசிப்பதில்தான் எத்தனை கோணங்கள்!

அதோடு பாத்ரூமில் பெரிய நிலைக் கண்ணாடி வேறு பதித்திருந்தோம். மேனியில் நீர்த்திவலைகள் பளபளக்கக் கண்ணாடியில் தெரிந்த எங்களின் முழு நிர்வாணக் கோலம் புதிய கிளு கிளுப்பை ஏற்படுத்தியது.

ஒருவரையொருவர் தழுவிய நிலையில். வெந்நீரில் வெது வெதுப்பில் ஏற்பட்ட சுகம் புதுவகையான செக்ஸ் எழுச்சியை எங்களிருவரிடையேயும் ஏற்படுத்திவிட்டதை நான் கவனித்தேன்.

சற்றைக்கெல்லாம் என்னுடைய அழகை பல்வேறு நிலைகளிலிருந்து ரசிக்க விரும்பியவரைப் போல ஷவரின் அடியில் என்னை மல்லாந்து படுக்கச் சொன்னார். ஷவரின் பூமாரி எனது பெண் குழியில் விழ, அந்த சுகத்தில் நானே என் கால்களை அகட்டிக் கொண்டேன்.

அந்தக் காட்சியை மெய்மறந்து ரசித்து நின்ற அவர் கதையில் வரும் மெல்லர்ஸின் வேகத்தோடு குனிந்து என் மீது படர, எங்களிருவர் உடலிலும் பரவி நின்ற நீர்த்திவலைகள் எங்களுடைய உடலின் நெருக்கத்தில் ஒரு வழுக்கலை ஏற்படுத்த, அதனாலேற்பட்ட கூச்சத்தால் நான் கலகல வென்று சிரிக்க, அவரும் எனது இளமையோடு விஷம விளையாட்டுகள் புரிய, அவருடைய உறுதியான ஆண்மை எனது பெண்மைக்குள் ஆக்கிரமிக்க, மேலே இருந்து விழுந்து

www.indianguide.in

www.anybook.in

கொண்டிருந்த ஷவரின் சுகத்தில் நாங்களிருவரும் புதுமையான இன்ப லோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினோம்.

கதையில் வரும் மெல்லர்ஸ் இவ்வளவு ஆண்மை பலத்தோடு செயல்பட்டிருப்பானா என்று என்னை நானே பார்த்துக் கேட்டுக் கொண்டேன்.

லேடி சாட்டர்லியின் காதலன் என்கிற நாவலை உள்ளபடியே லாரன்ஸ் அனுபவித்ததுத்தான் எழுதியிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது.

கோபியருடன் கண்ணன் ஜலக்ரீடை செய்தான் என்று நான் படித்திருக்கிறேன். காதல் லீலைகளை நீருக்குள் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று நான் ஆச்சரியப் பட்டதுண்டு. ஆனால், நீரில் உடல் நனையும்போது அதற்கொரு புதிய செக்ஸ் வேகம் கிடைப்பதை அன்றிரவு ஏற்பட்ட அனுபவத்தில் நான் தெரிந்து கொண்டேன்.

எங்கள் புணர்ச்சிக் காட்சி கண்ணாடியில் தெரிந்த போது அதுவே எங்கள் உறவில் உத்வேகத்தை ஏற்படுத்தக் காரணமாக இருப்பதையும் கவனித்தேன்.

களைத்து இருவரும் எழுந்து தழுவிய நிலையிலேயே குளித்து முடித்தோம். பிறகு என்னுடைய உடலை அவர் துண்டினால் துடைக்க, அவருடலை நான் துடைக்க, அப்போது ஏற்பட்ட கிளுகிளுப்பையும் குறும்பையும் சொல்லி முடியாது.

அதற்குப் பிறகு இருவரும் உடை உடுத்திக் கொண்டோம். சூடான காபி போட்டு அருந்தினோம். இன்பநினைவுகள் இதயத்தை நிரப்ப, படுக்கையில் சென்று படுத்தோம். அணைத்துக் கொண்டுதான் படுத்தோம். இந்த அணைப்பின் சுகம் வெறும் செக்ஸ் சுகம் மட்டுமல்ல. ஆன்மீக சுகம் என்று ஒன்றிருந்தால் அது இதுதான் என்று எனக்குத் தோன்றியது.

www.indianguide.in

www.anybook.in

ஆண்குறி வழிபாடு, பெண்குறி வழிபாடு என்பதெல்லாம் ஆன்மீக உணர்வின் ஒரு நிலை எனக் கருதியே நம்முடைய முன்னோர்கள் அந்த வழிபாடுகளை உருவாக்கியிருக்க வேண்டும்.

லேடி சாட்டர்லி கணவனுக்கு துரோகம் செய்து மெல்லர்ஸுடன் உறவு கொண்டாளென்பது சரியா, தவறா என்பதல்ல பிரச்சினை. தனது பெண்மைத் தேவையைக் கணவன் பூர்த்தி செய்யாமல் போனபோது, உடல் தேவை கருதி, ஒரு விபத்துபோல மெல்லர்ஸுடன் அவள் உடலுறவு கொள்ள, அவனிடம்தான் அந்தச் சுகத்தில் புதிய பரிமாணங்களை அவளால் உணர முடிகிறது. அதன் காரணமாகவே அவள் அவனது ஆண்குறியை வழிபாட்டுக்குரிய ஒரு விஷயம் போல மதிக்கிறாள்.

இதைக் காரணம் காட்டி ஆண்மேலாதிக்க உணர்வை வெளிப்படுத்துவதற்காகவே லாரன்ஸ் இந்த நாவலைக் கொச்சையாக எழுதியிருக்கிறார் என்று அபிப்பிரயாப்படுகிற விமரிசகர்களும் இருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் செக்ஸ் உறவில் மேலாதிக்கம், கீழாதிக்கம் என்று சொல்வதற்கெல்லாம் அர்த்தமிருப்பதைப் போலத் தோன்றவில்லை. ஆதிக்க உணர்வுகளையெல்லாம் மறந்து ஆணும் பெண்ணும் சங்கமித்துப் பெறுவதே செக்ஸ் இன்பம். இதில் கொடுப்பவருமில்லை வாங்குபவருமில்லை. இன்பம் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

லேடி சாட்டர்லியின் வருகைக்காக மெல்லர்ஸும் ஆவலோடு காத்திருப்பதாகவே லாரன்ஸ் குறிப்பிடுகிறார். இரண்டு உடல்களின் தேவை பூர்த்தியாகும்போது யார் மேல், யார் கீழ் என்கிற பிரச்சினை தோன்ற நியாயமில்லை.

ஆண் செயல்பட்டு இன்பம் பெறுகிறான்; பெண் அவனைச் செயல்பட வைத்து இன்பம் பெறுகிறாள். இரு

www.indianguide.in

www.anybook.in

வரும் ஒத்துழைக்காமல் இன்பம் என்கிற பேச்சுக்கே இடமில்லை.

பலவேறு சிந்தித்தபடியே நான் வெகு நேரம் படுத்திருந்தேன். என் கணவர் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் வெளிப்பட்ட திருப்தி என்னிடம் பெருமித உணர்ச்சியை எற்படுத்தியது. நான் அவருடைய முகத்தோடு முகம் சேர்த்துப் படுத்தபடியே உறங்கிப் போனேன்.

தூக்கத்திலும் இன்பக் கனவுகளே கண்டேன். கனவில் யார் யாரோ வந்து போனார்கள். லேடி சாட்டர்லியும் வந்தாள். 'நான் செய்தது தவறா? நீயே சொல்' என்று என்னைப் பார்த்துக் கேட்டாள்.

தவறென்று என்னால் எப்படிச் சொல்ல முடியும்? லேடி சாட்டர்லிக்கு வாத நோய் வந்து அவள் செயல்பட முடியாமல் போயிருந்தால் லார்ட் சாட்டர்லி என்ன செய்திருப்பார்?

ஆண் ஆதிக்க உணர்வில் நாவலை லாரன்ஸ் எழுதியதாகச் சொல்லும் விமரிசகர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

இலக்கியக் கதாபாத்திரங்கள் எப்படியோ இருக்கட்டும், இப்போது நாம் நிஜத்துக்கு வருவோம்.

3. கூச்சம் எதற்காக?

ஆண் உடலின் அழகை, எழுத்தாளர் லாரன்ஸ் பெண்ணால் ஆராதிக்கப்படும் ஒரு விஷயமாக அந்த நாவலில் சித்திரித்திருக்க வேண்டும்.

ஆண் - பெண் செக்ஸ் உறுப்புகளைப் பற்றி நம்முடைய மனோபாவத்தில் பெரிய மாற்றம் வரவேண்டும். ஆண்டவன் படைப்பில் எல்லா உறுப்புகளையுமே அர்த்தத்தோடும்

www.indianguide.in

www.anybook.in

நோக்கத்தோடும்தான் படைத்திருக்க வேண்டும். ஆண் செக்ஸ் உறுப்பும் பெண் செக்ஸ் உறுப்பும் அமைக்கப் பட்டுள்ள விதமே ஒரு கவிதைதான். பெண்ணாகிய நான் இப்படியெல்லாம் சொல்லுவதற்குக் கூச்சப்படவில்லை. மற்றவர்களும் கூச்சப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆண் செக்ஸ் உறுப்பை தண்டு வடிவிலும் பெண் செக்ஸ் உறுப்பை அதை ஏற்கும் வடிவிலும் இயற்கை அமைத்து, அந்த இரண்டு உறுப்புகளின் இணைப்பில் இன்பத்தையும் உருவாக்கியுள்ள அமைப்பு முறை சிருஷ்டிதத்துவத்தை வியந்து. பாராட்டுமளவுக்கு இருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

எல்லா உறுப்புகளும் எப்படி வேலை செய்கின்றன என்பதை அறிந்து கொள்ள நாம் கூச்சப்படாதபோது, மனித இனத்தையே தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ள நம்முடைய செக்ஸ் உறுப்புகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும் பேசவும் எதற்காக நாம் கூச்சப்பட வேண்டும்.

ஓர் உறுப்பின் அமைப்பைப் பற்றிச் சரியாக தெரிந்து கொள்ளாமல் அதைப் பயன்படுத்துவது கஷ்டம். ஏனைய உடல் உறுப்புகளிலிருந்த செக்ஸ் உறுப்புகள் விஷயம் கொஞ்சம் மாறுபட்டாலும்கூட. காது, மூக்கு போன்ற பல உறுப்புகளையும் நமக்காக மட்டும் நாம் பயன்படுத்திக் கொண்டால் போதும். செக்ஸ் உறுப்புகளின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் இன்னொருவர் உதவியும் அதற்கு தேவைப்படுகிறது.

ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் இந்த விஷயத்தில் ஒருவரோடொருவர் ஒத்துழைக்க வேண்டியவர் களாக இருக்கிறார்கள். ஆகவே, பெண் தன் உறுப்பைப் பற்றி மட்டுமின்றி, ஆணினுடைய உறுப்பு பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியவளாக இருக்கிறாள்.

www.indianguide.in

www.anybook.in

அது போலவே ஆணும் தனது உறுப்பைப் பற்றி தெரிந்துகொண்டு, பெண்ணின் உறுப்பு பற்றியும் அறிய வேண்டிய வனாக இருக்கிறான்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏனைய உறுப்புக ளெல்லாம் ஏறத்தாழ ஒரே மாதிரியாக அமைந்திருந்தாலும் செக்ஸ் உறுப்புகளின் அமைப்பில் மட்டும்தான் அவர்கள் முற்றிலுமாக வேறுபடுகிறார்கள். இந்த வேறுபாடுதான் அவர்களின் வெவ்வேறு செக்ஸுகளையும் அடையாளம் காட்டுகிறது.

ஆணும் சரி, பெண்ணும் சரி, ஏனைய உறுப்புகளை தாங்களாக உபயோகிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. கண் தானாகவே பார்க்கும், காது தானாகவே கேட்கும். ஆனால், செக்ஸ் உறுப்புகள் தங்கள் செயலில் முழுமையடையவேண்டுமானால் இருவர் நெருங்கி வர வேண்டிய கட்டாயமேற்படுகிறது.

செக்ஸ் பற்றி பேசுவதற்குக் கூச்சப்படுகின்ற எவரும் இந்த உண்மைகளை மறுத்துவிட முடியாது. செக்ஸ் உறுப்புகளைப் பயன்படுத்த வேண்டிய காலத்தையும் தேவையினையும் இயற்கையே நிர்ணயிக்கிறது. பருவம் வந்தவுடன் அந்த உறுப்புகளில் சில மாற்றங்கள் நிகழ்ந்து வேகம் பெறுகின்றன.

அறிந்தோ அறியாமலோ பெண் உறுப்பு, ஆண் உறுப்பை அவாவ ஆரம்பிக்கிறது. அது போலவே ஆண் உறுப்பும் பெண் உறுப்பை தேடத் தொடங்குகிறது. இதன் விளைவுகளை ஒரு குறிப்பிட்ட பருவத்தில் மனித உணர்ச்சிகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இயற்கை நிகழ்த்தும் அற்புதங்கள் இதன் மகத்துவத்தை ஆணும் பெண்ணும், குறிப்பாகப் பெண்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

www.indianguide.in

www.anybook.in

இந்த உணர்ச்சியைக் காதல் என்கிறார்கள். காமம் என்கிறார்கள். இந்தப் பெயர்களைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படவே வேண்டாம். மொழி ஆராய்ச்சியாளர்கள் இவற்றைப் பற்றி விரிவாக விவாதம் நடத்திக் கொண்டிருக் கட்டும்.

ஆண், பெண் கூட்டுறவுக்காக இந்த உணர்ச்சிகள் தோன்றுகின்றன. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நெருங்கியவுடன் என்ன செய்ய வேண்டும் என்பதை இயற்கையே, அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து விடுகிறது. ஆகவேதான் 'சொல்லி தெரிவதில்லை மன்மதக் கலை' என்று சொன்னார்கள். ஆண் - பெண் கூட்டுறவு இன்பத்தையளிக்கும் விஷயமாக இருப்பதால், அந்த உறவு திரும்பத் திரும்ப நிகழ வேண்டுமென இருவருமே ஆசைப்படு கிறார்கள்.

இந்த ஆசையை உண்டாக்கி வைத்திருப்பதும் இயற்கைதான். இது மனித இன வளர்ச்சிக்கு ஏற்பட்ட ஒரு ஏற்பாடு என்றாலும், இதிலிருந்து கிடைக்கின்ற இன்பத்தை ஆண் - பெண் இருபாலருமே அனுபவிக்கிறார்கள். இதெல்லாம் இயற்கையின் நியதிகள்.

கிடைக்கின்ற இந்த இன்பத்தைச் சிறப்பாக எப்படி அனுபவிப்பது என்பதை தெரிந்துகொள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் தயக்கம் வேண்டியதில்லை.

செக்ஸ் உறுப்புகள் ஆண் - பெண் கூட்டுறவுக்காக அமைந்தவை என்றாலும் உறுப்புகளின் அமைப்பில் எத்தனையோ இன்ப நிலைகளை இயற்கை ஏன் படைக்க வேண்டும்?

இந்த இன்ப நிலைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு ஆணும் பெண்ணும் செயல்படுகின்றபோது இன்ப உச்சத்தை அவர்களால் சென்று அடைய முடிகிறது. இது வாழ்க்கையின் வரப்பிரசாதம்.

www.indianguide.in

www.anybook.in

நானும் என் கணவரும் இந்த இன்பத்தை முழுமையாக அனுபவிக்கிறோம். முதல் இரவில் அவருக்கிருந்த சில பிரச்சினைகளை நான் புரிந்துகொண்டு அதைப் போக்கும் முயற்சியில் வெற்றி பெற்ற பிறகு (என்னுடைய முதல் புத்தகம் 'ஒரு பெண்ணின் அந்தரங்கக் குறிப்புகள், பார்க்க) எங்கள் வாழ்க்கையில் புதிய திருப்பமே ஏற்பட்டது.

எங்களுக்கிடையே இப்போது இன்ப உறவு வைக்க எதுவும் தடையாக இருப்பதில்லை. இருக்கவும் நாங்கள் அனுமதிப்பதில்லை. இதை ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் முள்ள அடிப்படை உரிமை என்றே நான் கருதுகிறேன்.

சில பெண்கள் நினைப்பதைப் போல (ஆண்களும் கூடத்தான்) உடலுறவு என்பது சில நிமிஷங்களில் நடந்து முடிந்துவிடுகின்ற விஷயமல்ல. உடலுறவுக்குப் பிறகு, அதை முழுமையாக அனுபவித்த பிறகு ஏற்படுகின்ற ஆரோக்கியத்தை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலுறவில் முழுமையான திருப்தி ஏற்படும்போது, உணர்ச்சிகள் சமன் நிலையை அடைகின்றன. தசைகள் களைப்பு நீங்கி உற்சாகம் பெறுகின்றன. நிம்மதியான உறக்கம் கிடைக்கிறது.

இதை ஒரு வாழ்க்கை தேவையாக இயற்கை ஆக்கி வைத்திருப்பதைப் பலர் மறந்தே போகிறார்கள். இதனால் செக்ஸ் வாழ்க்கை என்பது பலருக்கும் ஏதோ ஒரு அன்றாடக் கடமை போல் ஆகிவிடுகிறதே தவிர, அதை ரசனைக்குரிய விஷயமாகவோ ஆரோக்கியத்தையளிக்கின்ற விஷய மாகவோ பலரும் எடுத்துக் கொள்வதில்லை.

இதில் பெண்களாகிய நமக்கு மிகப் பெரிய பங்கு இருப்பது போலவே நான் கருதுகிறேன். என்னுடைய கணவர் ஷவரில் குளிக்கும் நிலையில் செக்ஸ் இன்பம் காண

www.indianguide.in

www.anybook.in

வேண்டும் என எண்ணியபோது, இதெல்லாம் எதற்கு? படுக்கையில் செய்யக்கூடியதை, பாத்ரூமில் போய் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டு சிணுங்கியிருந்தால், அவருடைய செக்ஸ் கற்பனைக்கு என்னால் நிச்சயம் ஒரு தடை ஏற்பட்டிருக்கும். நான் கொஞ்சம் மாறுபட்டு நினைத்தேன். தினம், தினம் படுக்கையில் நடப்பது ஒரு நாள் பாத்ரூமில் நடந்தால் எப்படியிருக்குமென்று பார்த்துவிடுவோமோ என எனக்கும் தோன்றியது.

உற்சாகமாக ஈடுபட்டோம். அந்த அனுபவம் புதுமையாக இருந்தது மட்டுமல்ல, சுகமாகவும் இருந்தது. நிர்வாண நிலையில் ஈர உடல்களோடு ஒருவரையொருவர் தழுவி ஒருவர் கவர்ச்சியை இன்னொருவர் கண் முன்னும் கண்ணாடிக் காட்சியிலும் ரசித்துப் புணர்ந்தபோது உள்ளபடியே இருவருமே இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திக்கு முக்காடிப் போனோம்.

இப்படியொரு வாய்ப்பை அன்புச் சகோதரிகள் எதற்காக இழக்க வேண்டும்.

புதிய சூழ்நிலை, புதிய அணுகுமுறை, புதிய கற்பனை புதிய உறவு என்றெல்லாம் செக்ஸ் இன்பத்தை அனுபவிக்க எண்ணும்போது அதில் ஏற்படும் கிளு கிளுப்புக்கு ஈடு இணை எதுவுமே கிடையாது.

இன்னொன்று, உடலுறவு நிகழும் முன் தயார் நிலை என்று ஒன்றிருக்கிறது. செக்ஸ் என்பது முதலில் எண்ணத்தில் தான் தோன்றுகிறது. அன்றைக்கு என் கணவர் என்னை நிர்வாணமாக்கி பாத்ரூமுக்கு இழுத்துச் செல்லும்போதே அவருடைய கற்பனை துரிதமாக வேலை செய்யத் தொடங்கி விட்டது. அதன் விளைவாக அவருடைய ஆண்மை முறுக்கேறி விட்டது.

www.indianguide.in

www.anybook.in

பெண்ணின் நிலையும் அப்படித்தான். ஆனால், தயார் நிலைக்குக் கொஞ்சம் காலதாமதமாகும். நானும் அவரும் ஷவரில் குளித்து ஒருவரையொருவர் தழுவி சுகமனுபவித்த போது எனது பெண்மையிலும் நீர் சுரந்து கலவிக்கு நான் தயாராகிவிட்ட நிலையில் தரையில் மல்லாந்து படுத்து ஷவர் எனது பெண்மையில் விழுந்து வருடியபோது கலவிக்கு ஏங்கும் நிலையை நான் பெற்றேன்.

என் கணவர் இந்தக் கலையில் இப்போது வல்லவராகி விட்டதால் நேரமறிந்து என்னை நெருங்கி அவர் செயல்பட இன்பச்சுழல் அனுபவத்தை நான் பெற்றேன்

இன்பச் சுழல் அனுபவத்தை ஆங்கிலத்தில் ORGASM என்று சொல்வார்கள். ஒரே போகத்தில் ஒரு பெண்ணுக்கு இது பல முறையும் ஏற்படலாம். சில சமயங்களில் ஏற்படாமலும் போகலாம். இந்த அனுபவத்தை ஒவ்வொரு பெண்ணும் பெறுவது அவளுடைய உடலாரோக்கியத்துக்கு மிகவும் இன்றியமையாதது. இதைப் பெற வேண்டுமானால் தன்னைப் பற்றி அதாவது தனது பெண்மை உறுப்பைப் பற்றி, அவளுக்குத் தெரிந்திருப்பது அவசியம். அவளுக்குத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அவளோடு புணர்ச்சி செய்யும் ஆணுக்கும் அது தெரிந்திருப்பது அவசியம்.

ஆண் சீக்கிரம் உணர்ச்சிவசப்படுவதைப் போலவே சீக்கிரமாகவே உணர்ச்சி உச்சத்தையும் எட்டி விடுகிறான். பெண் அதையடைய அவகாசம் தேவைப்படுதால் ஆணுக்கு சில விஷயங்களை உணர்த்தித் தன்னை எப்படி அவன் செயல்படுத்த வேண்டுமென்பதையும் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பது அவசியமாகிறது.

பெண்கள் இதில் கூச்சப்பட்டால் நஷ்டம் அவர்களுக்கு தான். காரணம், ஆண் விரைந்து தன்னுடைய உணர்ச்சித்

www.indianguide.in

www.anybook.in

தேவையைப்பூர்த்தி செய்து கொண்டுவிடுவான். பெண்தான் ஏமாற்றுத்துக்கு உள்ளாவாள். ஆகவே சகோதரிகளுக்கு கூச்சமோதயக்கமோ எதுவும் இருக்கக் கூடாது.

அவன் எப்படிச் செயல்பட்டால் ஒரு பெண்ணுக்கு இன்பம் கிடைக்குமோ அதை வாய் மொழியாகச் சொல்ல முடியாவிட்டாலும் அவனுடைய ஆண் உறுப்பிடமிருந்து ஒரு பெண் என்ன எதிர்பார்க்கிறாளென்பதைச் செயல் மூலம் செய்து காட்டி உணர்த்திவிட முடியும்.

ஒரு முறை இரு முறை நீங்கள் இப்படிச் செய்து விட்டால் பிறகு உங்களைத் திருப்திப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதை ஆண் தானாகவே தெரிந்துகொண்டு செயல்படத் தொடங்கிவிடுவான்.

அதோடு நீங்கள் இன்னொன்றையும் கவனத்தில் கொள்வது நல்லது ஆணின் செக்ஸ் உறுப்பு பற்றிய அடிப்படை அறிவு உங்களுக்கு வேண்டும்.

உங்களுடைய யோனியின் மேல் பகுதியில் அமைந்துள்ள மலர் என்கிற பகுதி எப்படி உணர்ச்சி மிக்கதாக இருக்கிறதோ அதைப் போலவே ஆண்குறியிலுள்ள மலர்ப்பகுதியும் உணர்ச்சிமிக்கது. ஆகவே இந்த இரண்டு பகுதிகளும் ஒன்றோடொன்று உராயும் போது இரு வருக்குமே மிகுதியான இன்பம் கிடைக்கிறது.

ஒருவேளை ஆண் தன் அவசரத்தில் இதை உணர்ந்து செய்ய தவறினாலும் நீங்கள் விடாதீர்கள். ஆண் குறியைப் பற்றி நீங்களே இதைச் செய்யத் தொடங்கும் போது ஆணும் உணர்ச்சிவசப்பட்டு மிகுதியான இன்பத்தை அனுபவிப்பான். ருசி கண்ட பூனை பிறகு சும்மா இருக்காது.

செக்ஸ் உறவில் மனிதர்கள் இன்பத்தைப் பெற வேண்டும் என்பதற்காகவே இயற்கை செக்ஸ் உறுப்புகளில்

www.indianguide.in

www.anybook.in

பல இன்ப நிலைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றது. அதைப் புரிந்துகொண்டு செயல்படுவதுதான் புத்திசாலித்தனம்.

ஒரு முறை ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு தயக்கமோ தடையோ இல்லாமல் செயல்படத் தொடங்கி விட்டால் பிறகு என் கணவர் புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்துத் தான் இன்பத்தை பெற்று என்னையும் இன்பத்தில் ஆழ்த்துவது போல உங்கள் கணவரும் செயல்படத் தொடங்கி விடுவார்.

சிலர் முழுமையான உடலாரோக்கியம் பெற்றிருந்தும் செக்ஸ் இன்பத்தை முழுமையான அனுபவிக்க முடியாமல் போவதற்கு அவர்களுடைய அறியாமையே காரணம்.

'நீடித்த போகம், நிலைத்த இன்பம்' என்கிற வாசகத்தை என்னுடைய படுக்கையறையில் கொட்டை எழுத்துகளில் எழுதி எங்கள் இருவர் கண்களிலும் படும்படியாக மாட்டி வைத்திருக்கிறேன்.

அன்புச் சகோதரியே! நீ முழுமையான செக்ஸ் இன்பத்தை பெற வேண்டுமானால் நான் இனி சொல்லப் போகும் விஷயங்களைக் கவனமாகக் கேள்.

உன்னுடைய கணவரிடம் உனக்குள்ள மனஸ் தாபங்களெல்லாம் நொடிப் பொழுதில் தீர்ந்து போகும். தலையணை மந்திரம் என்று சொல்லுகிறார்களே அது என்ன வென்று நினைக்கிறாய். படுக்கையில் உன்னுடைய கணவன் உல்லாசமாகி விடுகிறான்; அப்போது நீ சொல்லுகின்ற அனைத்தையும் அவன் கேட்டுக் கொள்வான் என்கிற அர்த்தத்தில்தான் அது சொல்லப்படுகிறது.

படுக்கையறையிலும் உன் கணவரை உன்னால் வசப்படுத்த முடியவில்லையானால், செக்ஸ் பற்றிப் போதுமான அறிவு உனக்கு இல்லாததே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

www.indianguide.in

www.anybook.in

சில அடிப்படை விஷயங்களை நீ தெரிந்து கொண்டால் உன் கணவர் உனக்கு தாசானு தாசனாகி விடுவார். அவருடைய அலுவலக் கவலைளெல்லாம் மறந்து உன்னுடன் கொஞ்சிக் குலவிக் கிடப்பார்.

அவருக்கு நீ அளிக்கின்ற செக்ஸ் இன்னும் அவருடைய வாழ்க்கையிலும் அவருக்கு நிம்மதியைக் கொடுக்கும். நீயும் அவரிடமிருந்து மிக அதிகமான இன்பத்தைப் பெற்று உன்னுடைய வாழ்க்கைக்கு உற்சாகமூட்டிக் கொள்ளலாம்.

நான் சொல்வதைக் கேட்குமுன் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். செக்ஸ் பற்றி உன்னுடைய மனதில் நிரம்பியுள்ள பழமையான எண்ணங்களை முதலில் அங்கிருந்து அப்புறப்படுத்தி விடு. இன்பம் ஒன்றே குறிக்கோள் என்கிற முடிவுடன் நான் சொல்லுவதைக் கவனி

பிறகு பாரதிதாசன் பாஷையில் சொல்ல வேண்டுமானால், இன்பம் கொள்ளை! கொள்ளை! கொள்ளைதான்!

4. தயார்தானா?

ஒரு பெண் உணர்ச்சிமயமானவளாக தன்னை ஆக்கிக் கொள்வது அவசியம். உணர்ச்சிமயம் என்று சொல்லுகின்ற போது செக்ஸ் உணர்ச்சியைத்தான் குறிப்பிடுகிறேன்.

அவ்வாறு இல்லாத பெண்ணை எந்த ஆணும் விரும்புவதில்லை. செக்ஸ்மயமான பெண் என்றால் பார்க்கின்றவர்களிடமெல்லாம் செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டுவது என்று அர்த்தமில்லை. படுக்கையறையில் உங்களுடைய செக்ஸ் உணர்ச்சியால் உங்கள் கணவரை நீங்கள் திக்குமுக்காடச் செய்ய வேண்டும்.

அதற்கு முதல் வழி உங்கள் உடல் பற்றிய பரிபூர்ணமான அறிவும், உங்கள் உடலிலுள்ள உணர்ச்சிப்

www.indianguide.in

www.anybook.in

பகுதிகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்கிற தெளிவும் முதலில் உங்களுக்கு இருக்க வேண்டும்.

பொதுவாக செக்ஸ் உணர்ச்சிப் பகுதி பெண்களின் உடலில் பல்வேறு பகுதிகளில் இருக்கிறது. ஆயினும் செக்ஸ் நிகழ்ச்சியில் பிரதானமாக ஈடுபடுகின்ற பகுதி பெண் குறியாகும்.

உங்களுடைய சிறுமிப் பருவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? சில சந்தர்ப்பங்களில் உங்களையறியாமலே உங்களுடைய விரல் பெண்குறியிலுள்ள மலர்ப்பகுதியை தீண்டும். விவரமறியாத பெற்றோர்கள் குழந்தையிடம் கெட்ட பழக்கம் ஆரம்பமாகிறது என்று எண்ணுவார்கள். சிலர் கண்டிக்கவும் செய்வார்கள் இது தவறு.

குழந்தை வளர்ச்சியடையும்போது தன்னுடைய ஏனைய உறுப்புகளை உணர்ந்து பயன்படுத்திக் கற்றுக் கொள்வது போலவே தன்னுடைய செக்ஸ் உறுப்பையும் உணரத் தொடங்குவதன் அடையாளமே இது. அதை ஒரு தவறான காரியம் போல நாம் கண்டிக்கும்போது குழந்தையின் ஆழ்மனதில் செக்ஸ் உறுப்பே ஒரு தவறான விஷயம் என்கிற கருத்தும் பதிந்து விடுகிறது.

செக்ஸ் பற்றிய தயக்கம் ஏற்படுவதன் ஆரம்பக் கட்டமே இதுதான்.

ஆகவேதான் பெரியவர்களான பிறகும் செக்ஸ் இன்பத்தை அனுபவிக்க முடியாமல் பல உணர்ச்சித்தடைகள் ஏற்பட்டு விடுகின்றன.

நீங்கள் புஷ்பவதியாகி வயதை அடையும்போது செக்ஸ் உணர்ச்சி உங்களிடம் வேகமாகத் தோன்ற ஆரம்பிக்கிறது. அப்போதும் நீங்கள் உங்களின் பெண்குறியைத் தடவியும்

www.indianguide.in

www.anybook.in

மலர்ப்பகுதியை லேசாக வருடியும் இன்பம் பெற முயற்சிக்கிறீர்கள்.

இப்போது இயற்கை இரண்டாவது முறையாக உங்கள் உடலைப் பற்றி, குறிப்பாக செக்ஸ் உறுப்புகளை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள உங்களைத் தூண்டுகிறது.

சிறுவயதிலே இதெல்லாம் தவறு என்கிற எண்ணம் உங்கள் மனதில் விதைக்கப்பட்டுவிட்டால் பருவவயதில் நீங்கள் இதைச் செய்யும்போது குற்ற உணர்ச்சியுடனேயே அதைச் செய்யத் தொடங்குகிறீர்கள். இதன் விளைவு என்ன தெரியுமா?

செக்ஸ் உணர்ச்சியும் குற்ற உணர்ச்சியும் பிரிக்க முடியாத ஒன்று போல உங்கள் மனதில் இடம்பெற்று விடுகிறது. அதனாலேயே திருமணமாகி செக்ஸ் இன்பத்தை அனுபவிக்கும்போது பல வகையான தயக்கங்களும் அச்சங்களும் தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன.

இதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டுமென்பதற்காகத் தான் செக்ஸ் பற்றிய பழமையான எண்ணங்களை முதலில் உங்கள் மனதிலிருந்து அப்புறப்படுத்தி விடுங்கள் என்று சொன்னேன்.

கொஞ்சம் சிரமமாக இருக்கலாம். துணிந்து அப்புறப் படுத்துங்கள். அப்போதுதான் இன்பக் கதவு திறக்கும். இப்போது விஷயத்துக்கு வருவோம்.

ஒரு பெண்ணின் உடலில் பெண்குறி பிரதான செக்ஸ் பகுதி என்றால் அதன் உணர்ச்சி மையம் மலரில் தானிருக்கிறது. அந்த மலர்ப் பகுதிதான் செக்ஸ் உணர்ச்சி ஊற்றெடுத்து பிரவகிப்பதற்கான ஊற்று கண். இயற்கை ஏற்கெனவே உங்களுக்கு அதை அடையாளம் காட்டி யிருக்கிறது. ஆனால், நம்முடைய பழக்க வழக்கங்களால்

www.indianguide.in

www.anybook.in

ஏற்பட்ட சூழ்நிலையில் அதை சரியாக உணராமல் உங்களைச் செய்திருக்கலாம்.

போனது போகட்டும். அந்த மலர்ப் பகுதி இன்னமும் உங்களிடம்தானிருக்கிறது. அதே உணர்ச்சிப் பகுதியாகத் தானிருக்கிறது. அதை இப்போதும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள யாரும் தடையாக இருக்கப் போவதில்லை.

இப்போது நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள். உங்கள் மலர்ப் பகுதியைத் தொட்டு உணர்ந்து பாருங்கள். ஒரு இன்பம் உங்கள் உடலெங்கும் பரவிப் படர்வதை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் உடலின்பத்தின் திறவுகோலே அங்கே தானிருக்கிறது.

அதை நீங்கள் தீண்டத் தீண்ட உங்கள் யோனித்துவாரச் சுவர்களிலிருந்து ஒரு திரவம் கசிந்து யோனிப் பாதையை வழுவழுப்பாக்குகிறது. இதற்குப் பொருள் என்ன என்று தெரிகிறதா?

அதாவது, ஆண்குறியை ஏற்றுக்கொள்ள யோனித் துவாரம் தயாராகி விட்டதன் அறிகுறி இது. இதிலிருந்து ஓர் உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் கணவர் விவரம் புரிந்தவராக இருந்தால் உங்களைத் தழுவுதல், முத்தமிடுதல், மார்பகங்களை அழுத்தி சுகம் காணுதல், முலைக் காம்புகளை வருடுதல் ஆகிய செயல்களில் ஈடுபட்ட பிறகு உங்களைக் கலவிக்குத் தயார் செய்வதற்கு, அவர் செய்யவேண்டிய அடுத்த காரியம் பெண் குறியைத் தடவி மலர்ப் பகுதியை லேசாக வருடுவதுதான்.

இதை அவர் செய்யத் தவறினால் கூச்சப்பட்டு சும்மாயிருந்து விடாதீர்கள். நீங்களாகவே அவரை அந்தக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அது உங்கள் உரிமை. உங்களின் செக்ஸ் இன்பம் அங்கேதான் மிகுந்திருக்கிறது என்கிறபோது

www.indianguide.in

www.anybook.in

அதைச் செய்வதற்கு நீங்கள் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமேமில்லை.

நீங்கள் ஆரம்பித்து வைத்துவிட்டால் போதும். பிறகு அவருடைய கற்பனைகள் தானாகவே வேலை செய்ய ஆரம்பிக்கும். உங்களை எத்தனையே இடங்களில் முத்தமிட்டு மகிழ்ந்தவர் அங்கேயும் முத்தமிட்டு மகிழ்வார். உணர்ச்சி மிக்க வேறு பல. காரியங்களையும் அவராகவே செய்யத் தொடங்கி விடுவார்.

இதெல்லாம் உங்கள் செக்ஸ் இன்பத்தைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ள நீங்கள் செய்கின்ற உபாயம். என்னுடைய கணவருக்கும் இந்த ரகசியம் தெரிந்ததால்தான் ஷவர் என்னுடலில் எங்கே விழ வேண்டுமெனத் திட்டமிட்டு விழச் செய்தார்.

இது ஒரு நிலை. உங்கள் யோனித் துவாரம்தான் புணர்ச்சியின்போது ஆண்குறியைத் தன்னுள் வாங்கிக் கொள்கிறது. யோனிச் சுவர்களில் ஏராளமான மடிப்புகள் இருப்பதால் வேண்டிய அளவுக்கு விரிந்து கொடுக்கும் சக்தி அதற்கு உண்டு. விறைத்த ஆண்குறியை அனுமதிப்பதற்கு இது தேவை என்பது ஒரு புறமிருக்க, குழந்தை பிறக்கும் போது இந்தத் தசைகள் போதுமான அளவிற்கு விரிந்து பிரசவத்தை எளிதாக்குகிறது. மடிப்புச் சுவர்களின் மூலம் இரண்டு பெரிய அற்புதங்களை இயற்கை நிகழ்த்தி வைக்கிறது.

யோனிச் சுவர்களுக்கு செக்ஸ் உணர்ச்சி அதிகம். ஆண் குறி யோனித் துவாரத்துக்குள் இயங்கும்போது இந்தச் சுவர்கள் அதே உராய்வினால் உணர்ச்சி மயமாகி மிகுதியான இன்பத்தை ஏற்படுத்துகிறது.

இப்போது முக்கியமானதொரு கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். நீங்கள் புணர்ச்சியின் போது முழுமையான

www.indianguide.in

www.anybook.in

இன்பம் பெற, ஆண்குறியின் உறுதி முக்கிய அம்சமாகிறது. உங்கள் இன்பத்திற்காக ஆண்குறியை உறுதியான நிலையில் நீடிக்கும்படி பார்த்துக் கொள்வது உங்கள் கடமையாகிறது.

செக்ஸ் விஷயத்தில் ஆண்கள் அவசரக்காரர்கள் என்பதால் அவர்கள் பொறுமையாகச் செயல்படும்படி பார்த்துக் கொள்வதில் உங்களுக்கும் பொறுப்பு உண்டு. செக்ஸ் உறவில் இன்பத்தை வைத்திருந்தாலும் அதன் நோக்கம் ஆணின் மூலம் பெண்ணை கருத்தரிக்கச் செய்வதுதான்.

ஆணிடமிருந்து விந்து வெளிப்படுவதும் பெண் தன்னுடைய யோனித்துவாரத்துக்குள் அந்த விந்தினை ஏற்றுக் கொள்வதுதான் உடல் பூர்வமாக இயற்கை செய்து வைத்திருக்கும் ஏற்பாடு. இது நிறைவேறுவதற்காகவே காமஉணர்ச்சியால் ஆண்குறியை விறைத்தெழச் செய்கிறது இயற்கை. இல்லாவிட்டால் புணர்ச்சியே சாத்தியமில்லாமல் போய்விடும்.

அதனால் ஆணிடமிருந்து விந்து வெளியானவுடன் இயற்கையின் வேலையும் பூர்த்தியாகிவிடுவதால் ஆண்குறி தானாகவே சுருங்கி விடுகிறது.

ஆனால், புணர்ச்சியின் விளைவாக முழுமையான இன்பம் கிடைத்து இது நிகழ்ந்தால்தான் பெண்ணுக்கு முழுதிருப்தி கிடைக்க முடியும். ஆனால், உணர்ச்சிவசப்பட்டு ஆண் விந்தினை விரைந்து இழந்துவிடுவானாகில் கர்ப்பம் தரிப்பதுகூட சாத்தியமாக இருக்கலாம். ஆனால், பெண்ணுக்கு இன்பம் கிடைப்பது சாத்தியமில்லாமல் போய்விடுகிறது.

ஆணுக்கு இது பிரச்சினையேயில்லை. உணர்ச்சி மிகுதியானபோதுதான் அவனிடமிருந்து விந்து வெளிப்படுகிறது. அதனால் அவனுக்கு ஒருவகையில் திருப்தியும் ஏற்பட்டு விடுகிறது.

www.indianguide.in

www.anybook.in

ஆனால், அன்புச் சகோதரியே? நீ வெறும் பிள்ளை பெறும் யந்திரமாக இருந்தால் இதெல்லாம் சரிதான். உன்னுடைய உடலும் உறுப்புகளும் இன்பத்துக்கு ஏங்கித் தவிக்கும்போது இந்தக் கதி உனக்குத் தேவைதானா?

பெண்களின் உரிமைப் போராட்டத்தைப் பற்றிப் படிக்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இன்பத்தைப் பெறுவதற்கு சகல ஏற்பாடுகளையும் வைத்துக் கொண்டு அதை முழுமையாக நீ பெற முடியாமல் போனால் நீ வெளியில் நடத்தும் உரிமைப் போராட்டங்களுக்கு அர்த்தமேயில்லை.

படுக்கையறையில் உன்னுடைய உரிமைகளைப் பெற முதலில் நீ கற்றுக் கொள். மற்ற உரிமைகள் பிறகு தானாகவே வரும்.

பெண்ணைத் திருப்திப்படுத்த முடியாமல் ஒரு ஆண் இருந்தால் திருப்திபடுத்தச் சொல்லி அவனைக் கேட்பதற்கு உனக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. ஏனைய உரிமை களைப் பெற நடுவராக இருக்கும்படி நீ எவரையும் கூப்பிட முடியாது.

நீயும் உன்கணவரும் மட்டுமே தனிமையிலமர்ந்து பேசி தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை இது. இந்த விஷயத்தில் நீ உன்கணவருக்கு ஆசானாகவே இருந்து பாடம் சொல்லித் தரலாம். நான் அப்படித்தான் என் கணவருக்குச் சொல்லிக்கொடுத்தேன். அது பற்றிய விவரங்களை என்னுடைய முதல் புத்தகத்தில் விரிவாகவே சொல்லி யிருக்கிறேன்.

உன்னுடைய கணவர் முயற்சித்தால் நீண்ட நேரம் உன்னோடு போகம் செய்ய முடியும். அதற்கான பொறுமையை அவரிடம் ஏற்படுத்த நீதான் பொறுமையாக வேண்டும்.

www.indianguide.in

www.anybook.in

பழக்கத்தில் இந்தப் பிரச்சினையை சுலபத்தில் நீ தீர்த்துக் கொண்டு விடலாம். அதற்காக நீ சோர்வடைய தேவையில்லை.

உன் கணவருடைய செக்ஸ் உறுப்புகளின் தன்மையை சில இரவுகளிலேயே நீ சரியாக கணித்து அறிந்து கொண்டு விட முடியும். உனது உடலின் எந்த பாகத்தை எப்போது அவரிடம் ஒப்படைப்பது என்பதை எல்லாம் நீ சரியாகத் திட்டமிட்டுக் கொண்டால் அவருக்கும் பொறுமை தானாகவே வந்து விடும்.

அழகு என்பது வேறு. செக்ஸ் என்பது வேறு. அழகு என்பது தோற்றம். செக்ஸ் என்பது அனுபவம். அழகு செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டப் பயன்படலாம். செக்ஸ் திருப்தியை அதனால் மட்டுமே அளித்து விட முடியாது.

அன்புச் சகோதரியே, நீ அழகாயில்லை என்பதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காது செக்ஸியாக இருக்கக் கற்றுக் கொள்.

உன் கணவர் வெளியில் செல்லும்போது வேறொரு பெண்ணை சைட் அடிக்கிறாரென்றால் உடனே ஆத்திரப் பட்டு அந்த ஆத்திரத்தை வெளிக்காட்டாதே. அந்தப் பெண்ணின் ஏதோ ஒரு அம்சம்தான் அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அவருடைய நோட்டம் அந்தப் பெண்ணின் எந்தப் பகுதியின் மீது செல்கின்றது என்று கொஞ்சம் பொறுமை யாகக் கவனி,

அந்தப் பெண்ணுக்குப் பெரிய மார்பகங்கள் இருக்கக் கூடும். அது ஒருவேளை அவரைக் கவர்ந்திருக்கலாம், சில பெண்கள் கண்களுக்கு மைதீட்டும்போது அந்தக் கண்கள் விசேஷக் கவர்ச்சியைப் பெற்றுவிடுவதுண்டு. பெண்களிட முள்ள இப்படி ஏதோ ஒரு அம்சம்தான் ஆண்களைக்

www.indianguide.in

www.anybook.in

கவருகிறது, அதை செக்ஸ் மனோதத்துவத்தில் Fetish என்று சொல்லுவார்கள்.

அதை நீங்கள் புரிந்துகொண்டு விட்டால், அது போன்ற ஒப்பனையை நீங்களும் செய்து கொண்டு விடலாம். மார்பழகைக் கவர்ச்சியாக்கும் பிராக்கள் கடைகளில் இருக்கின்றன. அதை வாங்கியணிந்து நீங்கள் மார்புக் கவர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு விடலாம். இப்படி உங்கள் கணவருக்கு எதில் நாட்டம் என்பதைக் கண்டறிந்து அதை நீங்கள் செய்து கொள்ளும்போது நீங்களே அவருக்கு செக்ஸியாகக் காட்சியளிக்கத் தொடங்கி விடுவீர்கள்.

செக்ஸ் செயல்பாடுதான் உறுப்புகளில் இருக்கிறதே தவிர, செக்ஸ் உணர்ச்சி சிந்தனையிலதான் இருக்கிறது. சில எண்ணங்கள் சிலர் மனதில் ஏதோ ஒரு காரணத்தினால் செக்ஸ் உணர்ச்சியோடு இணைக்கப்பட்டுவிடும். அந்தக் குறிப்பிட்ட எண்ணம் சம்பந்தப் பொருள்களை பார்க்கும்போதும் அவர்களுக்கு செக்ஸ் உணர்ச்சி தானாகவே கிளர்ந்தெழும்.

இதை நீங்கள் ஒரு குறையாக எண்ண வேண்டியதில்லை. உங்களுக்கு சாமர்த்தியமிருந்தால் அதையே ஒரு வாய்ப்பாக ஆக்கிக் கொண்டு உங்கள் கணவரின் உணர்ச்சிகளை எளிதில் தூண்டி விட்டுவிடலாம்... இந்த உண்மையை கூட நானும் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்திலிருந்துதான் புரிந்து கொண்டேன்.

செக்ஸ் மனோதத்துவம் ஒரு சுவையான விஷயம். அனுபவத்தால் ஓரளவுக்கு நம்மால் அதைப் புரிந்துகொள்ள முடியும். எல்லா ஆண்களின் செக்ஸ் மனோதத்துவத்தையும் ஆராய வேண்டிய அவசியம் நமக்கில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன் கணவரின் செக்ஸ் மனோதத்துவத்தை ஆராய்ந்து புரிந்துகொண்டால் போதும். கணவரைப்

www.indianguide.in

www.anybook.in

படுக்கையறைப் பதுமையாக்கி விளையாடிப் பார்த்து விடலாம்.

எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கேளுங்கள். எனது செக்ஸ் வாழ்க்கையில் அது ஒரு சுவையான அனுபவம். மறக்க முடியாத அனுபவம்.

5. கவனம் திரும்பிய கணவர்!

நானும் என் கணவரும் நண்பரொருவர் வைத்த பார்ட்டிக்குச் சென்றிருந்தோம். அதில் கலந்துகொள்ள எங்களுக்கு அறிமுகமானவர்களும், அறிமுகமில்லாதவர்களுமாக நிறைய ஆண்களும் பெண்களுமாக வந்திருந்தார்கள். பார்ட்டி என்று சொன்னாலே குறிப்பாகப் பெண்களாகிய நாம் விலை உயர்ந்ததும் கவர்ச்சிமிக்கதுமான உடைகள் அணிந்து செல்வது பழக்கமென்பதை நீங்களறிவீர்கள், நானும் கவர்ச்சியாக உடையணிந்து கொண்டுதான் சென்றிருந்தேன். மற்றவர்களைக் கவர வேண்டும் என்பதற்காக அல்ல. என் கணவரின் கவனம் மற்ற பெண்களின் பக்கம் சென்றுவிடக்கூடாது என்பதற்காக?

பார்ட்டி கலகலப்பாக இருந்தது. புதிய அறிமுகங்களும் நிறையக் கிடைந்தன. ஆனால், ஒரு விஷயத்தை நான் கவனிக்கத் தவறவில்லை. என் கணவரின் கண்கள் குறிப்பாக ஒரு பெண்ணையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. வந்திருந்த எத்தனையோ அழகிகளைத் திரும்பிப் பார்க்காத அவர், அந்த ஒரு குறிப்பிட்ட பெண்ணை மட்டும் அடிக்கடி பார்த்து ரசித்தது எனக்குக் கொஞ்சம் வியப்பாக இருந்தது. அப்படி அவளிடம் என்னதான் இருக்கிறதென்று நானும் அவளை நோட்டமிடத் தொடங்கினேன்.

www.indianguide.in

www.anybook.in

அங்கு வந்திருந்த மற்ற பெண்களோடு ஒப்பிட்டால் அவள் சாதாரணமாகத்தானிருந்தாள். உடலமைப்பிலும் கவர்ச்சி வளைவுகளும் பார்வையைச் சுண்டி இழுக்கும் மேடு பள்ளங்களும் அப்படியொன்றும் பிரமாதமாக அவளிடம் அமைந்திருக்கவில்லை. பின் ஏன் இவருக்கு அவளிடம் அவ்வளவு நாட்டம்?

மூளையை சுறுசுறுப்பாக்கினேன். சுலபத்தில் எதுவும் பிடிபடவில்லை. பிறகு போதி மரத்தடியில் புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்டதைப் போல என் மனதில் ஒன்று பளிச்சிட்டது. அந்தப் பெண் உடுத்தியிருந்த உடைதான் அது. அவளொன்றும் மாடர்ன் டிரஸ் அணிந்திருக்கவில்லை. சேலைதான் உடுத்தியிருந்தாள். பட்டுச் சேலை. ரத்தச் சிவப்பு நிறம். பளீரென்று கண்களில்படும் வனப்பு.

யோசிக்க யோசிக்க இதை தவிர வேறு எதுவும் அவளுடைய கவர்ச்சிக்குக் காரணமாக இருக்க வழியில்லை என்கிற முடிவுக்கு வந்தேன். நன்றாக யோசித்த போது சிவப்பு நிறத்துக்கு என் கணவரின் செக்ஸ் உணர்ச்சியை விழிப்புக் கொள்ளச் செய்யும் சக்தி இருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தேன். என் கணவரின் நடவடிக்கை எதையும் கண்டு கொண்டதாக நான் காட்டிக் கொள்ளவில்லை.

என்னுடைய அறியாமையை நொந்து கொண்டேன். இவருடன் இவ்வளவு நாள் பழகியும் இந்தச் சிறிய உண்மை எனக்கு எவ்வாறு புலனாகாமல் போயிற்று என்பது வியப்பை யளித்தது. வேறு பெண்களின் விஷயமாக இருந்தால், அதை என்னால் ஓரளவுக்குப் புரிந்துகொண்டிருக்க முடியும், ஆனால், என்னைப் பொறுத்தவரையில் செக்ஸ் விஷயத்தில் - செக்ஸ் இன்பத்தை அனுபவிப்பதில் - கணவரின் விருப்பம் தெரிந்து அவரின் செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டி விடுவதில்

www.indianguide.in

www.anybook.in

திறமையை வளர்த்துக் கொண்ட எனக்கு இது ஏன் புரியாமல் போயிற்று என்பது விளங்கவில்லை.

ஆனாலும் ஒரு சந்தேகம். என்னுடைய இந்தக் கண்டுபிடிப்பு சரியாக இருக்குமென்று நிச்சயித்துக் கொள்ளுவதற்கும் என்னிடம் ஆதாரம் எதுவும் இருக்கவில்லை. வெறும் யூகம்தான். அதைச் சரிபார்க்க அந்தப் பெண் உடுத்தியிருக்கும் சிவப்பு நிற பட்டுப் புடவை குறித்துப் பேசிப் பார்க்கலாமா என எண்ணினேன். ஆனால், அவருடைய நடவடிக்கைகளை நான் கவனித்திருக்கிறேன் என்பதை அது காட்டிக் கொடுத்து விடுமாதலால் அது பற்றிய பேச்சை ஜாக்கிரதையாகத் தவிர்த்தேன்.

ஒருவாறு பார்ட்டி முடிந்து வீட்டுக்குச் சென்றோம். வழக்கமாக நாங்கள் வெளியில் போய்விட்டு வீடு திரும்பினால் அவர் புதிய உற்சாகத்தோடு இருப்பார். வெளியில் தான் பார்த்த காட்சிகளைப் பற்றியெல்லாம் என்னிடம் மனம் விட்டுப் பேசி, சில்லறை விஷமங்கள் புரிந்து, என் உணர்ச்சிகளைத் தூண்டி என்னை அனுபவிப்பது அவருக்குப் பழக்கம்.

ஆனால், இன்றைக்கு அவரிடம் வழக்கமான உற்சாகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. பால் அருந்தி விட்டுப் படுத்துக் கொண்டார். சுண்டக்காய்ச்சிய பசும்பாலை எவ்வளவுதான் சுவைத்து அருந்திவிட்டுப் படுத்தாலும் ஒரு குழந்தையைப் போல என்னுடைய முலைப்பாலை உண்ணாமல் அவருக்குத் தூக்கம் வராது. (பால் இருக்கிறதா என்பது வேறு விஷயம்)

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தபடியே படுத்திருந்தார். சிவப்புச் சேலை செய்த என்பதே எனக்குப் புரிந்தது. அப்போதுகூட அவளையே கேட்டுவிட வேண்டும் என்று ஓர்

www.indianguide.in

www.anybook.in

துடிப்பு. அவசரப்படக் கூடாது என்று என்னை நானே நிதானப்படுத்திக் கொண்டேன்.

சற்றைக்கெல்லாம் அவர் தூங்கிப் போனார். நான் விழித்தபடியே படுத்திருந்தேன். எனது கற்பனையில் சிவப்பு முந்தானையொன்று காற்றிலசைத்து எச்சரிக்கை செய்து கொண்டிருந்தது. செக்ஸ் விஷயத்தில் இதுவரையில் தோல்வி கண்டறியாதவள் நான். இந்த சிவப்புக்கு நானா பயப்படுவேன்?

மறுநாள்காலை அவர் அலுவலகத்துக்குப் புறப்பட்டுப் போனவுடன் நான் எனது வங்கி பாஸ் புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். ஆயிரம் ரூபாய்க்கு மேல் என் கணக்கி லிருப்பதைப் பார்த்து ஆறுதல் அடைந்தேன். வங்கிக்குச் சென்ற பணத்தை எடுத்துக்கொண்டு ஜவுளிக்கடைக்கு போனேன்.

நல்ல ரத்தச் சிவப்பு பட்டுச் சேலையைத் தேடிக் கண்டு பிடிப்பது பெரும்பாடாகி விட்டது. அதே இரத்தச் சிவப்பையல்லவா நான் தேடினேன்? ஒரு வழியாகக் கண்டுபிடித்து வாங்கினேன்.

பாதி வெற்றி பெற்றுவிட்டதைப் போன்ற திருப்தி யுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அன்றைக்கு பார்த்து இரவு வெகு நேரம் கழித்துத்தான் அவர் வீடு திரும்பினார். சிவப்புப் சேலையைத் தேடிப் போய் விட்டாரோ என்றுகூட எனக்குத் தோன்றியது. பெண்ணின் மனம் இருக்கிறதே, அது இம்மாதிரி விஷயங்களில் எல்லை மீறிய கற்பனைகளை செய்யும். நானும் பெண்தானே.

அவருக்குப் பிடித்தமான சமையலைச் செய்து அவருக்காகக் காத்திருந்தேன். சேலை வாங்கியதோடு நிற்கவில்லை. அதற்கு மேட்ச்சாக சிவப்பு ப்ளவுஸ்

www.indianguide.in

www.anybook.in

ஒன்றையும் அவசரமாகத் தைத்து வாங்கினேன். கொஞ்சம் கூலி கூடக் கேட்டான். எனது திட்டம் வெற்றி பெறுவதற்கு அது ஒரு சிறிய தொகை போலவே தோன்றியது. நன்றாக குளித்து சிவப்புச் சேலையுடுத்தி அதற்கு மேட்ச்சாக ப்ளவுஸும் அணிந்து தலையில் பட்டு ரோஜாவும் அணிந்து என்னுடைய திருக்கோலத்தை நிலைக் கண்ணாடியில் நான் பார்த்தபோது முதல் நாள் பார்ட்டியில் சந்தித்த சிவப்பு சேலைப் பெண் படுசாதாரணமாகி விட்டாள்.

நேரம்தான் நகர மறுத்தது. இந்த மனிதருக்கு அலுவலகத்தில் அப்படி என்ன தலை போகிற வேலை என்று நான் சலித்துக் கொண்டேன்.

வெளியில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டவுடன் அவர் வந்து விட்டாரென்பதையறிந்து கதவை தாளிடாமல் சாத்திவைத்து விட்டு படுக்கையறைக்கு போய் தூங்கும் பாவனையில் படுத்தேன்.

ப்ரியா, ''ப்ரியா'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ள நுழைந்தவர், கடைசியில் படுக்கையறைக்கு வந்தார். அவர் காலடிச் சத்தம் எனக்குத் தெளிவாகவே கேட்டது. கண்களை மூடிக்கொண்டு நடிப்புத் தூக்கத்தில் இருந்தேன்.

சற்று நேரம் அமைதி. மனக் கண்ணாடியில் அவருடைய செயல்களை என்னால் பார்க்க முடிந்தது. வைத்த விழி வாங்காமல் பிரமித்துப்போய் என்னையே பார்த்துக் கொண்டு நிற்கிறார். அவருடைய கண்கள் சிவப்புச் சேலையணிந்த என்னுடைய உடல்மீது மேய்ந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. அனுபவிக்க முடிந்தது.

காலடி ஓசை இப்போது என்னை நெருங்குகிறது படுக்கையின் மீது அவர் அமர்கிறார். அவர் மூச்சுக் காற்று என் முகத்தை ஸ்பரிசிக்கிறது. தன் கண்ணெதிரே படுக்கையில்

www.indianguide.in

www.anybook.in

காட்சி தரும் அழகுக் குவியலைத் தீண்டிக் கலைத்து விடக்கூடாது என்று அவர் நிதானிப்பது எனக்குப் புரிகிறது.

பழத்தோட்டம் அருகே பசிகாரன் இவ்விடத்தில் என்கிற பாரதிதாசனின் வரிகள்தான் இப்போது என் நினைவுக்கு வருகின்றன.

இப்போது இரண்டு பசிகளால் அவர் அவதிப்பட வேண்டும் என்பதை நான் உணருகிறேன். வயிற்றுப் பசி! உடல் பசி!

அதற்கு மேலும் அவரைத் தவிர்க்கவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. அவர் எதிர்பாராமல் திடீரென்று திரும்பி அவரை இழுத்து என்னோடு அணைத்துக் கொள்கிறேன். அவரும் காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்பைப்போல என் உடலோடு ஒட்டி மூச்சு திணறுகிறார்.

''இந்தச் சிவப்பு சாரியில் நீ கொள்ளை அழகு'' என்கிறார்.

என் கணக்கு சரிதான் என்பதை உணர்ந்து எனக்கு நானே சிரித்துக் கொள்கிறேன்.

''பசிக்கவில்லையா? சாப்பிட வாருங்கள்'' என்று அழைக்கிறேன்.

என் மீது அவருக்கிருந்த பிடியை தளர்த்தாமலே சாப்பிடுவதற்கு இப்போது என்ன அவசரம் என்கிறார்.

நான் பதில் சொல்லுமுன் அவருடைய உதடுகள் என் உதடுகளைப் பூட்டி விடுகின்றன. அப்பப்பா! சிவப்பு நிறத்துக்கு இவரிடம் இவ்வளவு சத்தியா?

ஒருவாறு சமாளித்து எழுந்து நான் அடுப்பங்கரைக்கு சென்றேன், படுக்கையில் உட்கார்ந்தபடியே வைத்த விழி வாங்காமால் அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

www.indianguide.in

www.anybook.in

''சாப்பிடுங்கள். நேரமாகவில்லை.''

அவர் எழுந்து உடை மாற்றிக் கொண்டு சாப்பிட வந்தமர்ந்தார். என்னைப் பார்த்து ரசித்தபடியே சாப்பிட்டார். என்னையும் அருகில் உட்கார்ந்து சாப்பிடச் சொன்னார்.

அவருடைய அவசரம் எனக்குப் புரிந்தது.

இந்த அவசரத்தைத்தானே நானும் எதிர்பார்த்தேன். இருவரும் சாப்பிட்டு முடித்தோம். வழக்கம் போல் வாசனைப் பாக்கோடு வெற்றிலை போட்டுக் கொண்டு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தோம். தனக்குப் பிடித்த தின்பண்டத்தை குழந்தை பார்ப்பது போல என்னையே பார்த்துக் கொண்டிருந்த அவர், ''இந்தப் பட்டுச் சேலை எப்போது வாங்கினாய்; இது வரையில் நான் பார்க்கவே யில்லையே'' என்றார்.

இன்றுதான் வாங்கினேன்.

சிவப்புப் பட்டுச் சேலை வாங்க வேண்டுமென்று உனக்கு ஏன் தோன்றியது?

''நீண்ட நாட்களாகவே சிவப்பப் பட்டுப் புடவை வேண்டுமென்று எனக்கு ஆசை. இன்றுதான் வாங்க வேண்டுமென்று தோன்றியது... வாங்கினேன்...''

''இந்த நிறம் உனக்கு ரொம்பவும் பொருத்தமாக இருக்கிறது. இவ்வளவு நாள் இது ஏன் உனக்கு தோன்ற வில்லையா?''

''எனக்கு தோன்றாதது இருக்கட்டும். உங்களுக்கு ஏன் தோன்றவில்லை?''

''இந்தப் புடவையில் உன்னைப் பார்த்த பிறகுதான் அதை நான் புரிந்து கொண்டேன்.''

''நேற்றுத்தான் எனக்கும் புரிந்தது. இன்றைக்கு வாங்கி விட்டேன்'' எனக் கூறிய நான் அதை தொடர்ந்து மேலும்

www.indianguide.in

www.anybook.in

அவரைச் சிந்திக்க விட விரும்பாதவளாக எழுந்து படுக்கை யறையை நோக்கி நடந்தேன். என்னைத் தொடர்ந்து வந்த அவர் படுக்கையில் நான் மல்லாந்து படுத்திருக்கும் காட்சியை இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றார்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''பார்க்கிறேன்... ரசிக்கிறேன்.''

''சிவப்பு என்றாலே உங்களுக்கு ஒரு தனி ரசனை.''

இதை நான் சொன்னவுடன், ''ப்ரியா! ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். நேற்று பார்ட்டியில் ஒரு பெண் கட்டியிருந்த சிவப்புப் பட்டுச் சேலை மிகவும் கவர்ச்சியா யிருந்தது. அப்போதே அதுமாதிரி ஒன்று உனக்கும் வாங்கிக் கொடுத்துக் கட்டிக் கொள்ளச் சொல்ல வேண்டுமென்று எண்ணினேன்.''

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து தான் நான் இன்றைக்கு அவசர அவசரமாக இதை வாங்கினேன்.''

''நிஜமாகவா?''

''நீங்கள் சொல்லா விட்டாலென்ன, நான் கண்டு பிடிக்க மாட்டேனா'' என்று நான் கூறவும், ஏற்கெனவே உணர்ச்சியில் துரும்பாகி மிதந்து கொண்டிருந்த அவர், பொறுமையை இழந்தவராகப் படுக்கையில் தாவி என்னை அணைத்துக் கொண்டு முத்தமழை பொழியத் தொடங்கினார்.

சாதாரணமாக நிர்வாணக் கோலத்தில்தான் நாங்கள் உடலுறவு கொள்து வழக்கம். இன்றைக்கு என்னுடைய சிவப்புச் சேலையை அப்புறப்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபடவில்லை. அவருடைய செக்ஸ் உணர்ச்சியை அந்த சிவப்புப் பட்டு வேகப்படுத்திக் கொண்டிருந்தது. ஆகவே வழக்கத்துக்கு மாறாக அந்தச் சிவப்பிலேயே அவர் என்னை

www.indianguide.in

www.anybook.in

அனுபவித்தார். அவருடைய உறவில் புதுவேகம் தோன்றக் காரணமாயிருந்த சிவப்பை நான் மனமார வாழ்த்தினேன்.

என்னுடைய இந்த அனுபவத்தைப் படிக்கும் அன்புச் சகோதரிகள் ஒரு விஷயத்தை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு விரிவாக எழுதியுள்ளேன்.

சிவப்பு நிறத்துக்கு மட்டும்தான் செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டும் சக்தி இருக்கும் என்று எண்ண வேண்டாம். என்னுடைய கணவரின் செக்ஸ் உணர்ச்சியைத்தூண்ட சிவப்பு நிறம் காரணமாக இருந்திருக்கிறது. அதை நான் கண்டுபிடித்து என்னுடைய செக்ஸ் இன்பத்தைப் பெருக்கிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டேன்.

ஒவ்வொரு ஆணிடமும் ஒவ்வொரு நிறம் இந்த உணர்ச்சியைத்தூண்டக் காரணமாகலாம். உங்கள் கணவரின் செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டுவதற்கு எது சக்தி படைத்ததாகவே இருக்கிறதென்பதை நீங்களேதான் அனுபவத்தில் கண்டறிய வேண்டும்.

மற்றொன்று, உங்கள் கணவரின் கவனம் வேறு பெண்கள் மேல் சென்றால், அதை உடனே விவகாரமாக்கிக் குடும்ப அமைதியைக் கெடுத்துக் கொண்டு விடாதீர்கள். செக்ஸ் விஷயத்தில் அவருடைய ருசி என்ன என்பதை அறிந்து அதற்கேற்றபடி உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் நீங்கள் அணியும் உடையின் அமைப்பும் நிறமும் முக்கிய பங்கு வகிக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் அணிந்திருக்கும் உடை ஆபாசமென மற்றவர்கள் சொல்வார்கள் என்று ஒருபோதும் கவலைப்படாதீர்கள். உங்கள் கணவருக்கு அது திருப்தியளிக்குமென்றால், அது உங்கள் இருவரின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கு

www.indianguide.in

www.anybook.in

மென்றால், மற்றவர்களின் அபிப்பிராயத்தை கொஞ்சமும் சட்டை செய்யாதீர்கள். ஏனெனில், இப்படியெல்லாம் அபிப்பிராயம் சொல்கிறார்கள் உங்களின் தாம்பத்திய இன்பத்திற்கு கொஞ்சமும் சம்பந்தப்படாதவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

சில சமயங்களில் நமக்கேற்படும் சில அனுபவங்கள் தான் நம்முடைய செக்ஸ் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைய முடியும்.

என்னுடைய வேறு சில அனுபவங்களைக் கேட்டால் நீங்களும்கட்டாயம்என்னுடையகருத்தைஒப்புக்கொள்வீர்கள்.

கேட்கிறீர்களா?

6. புதிய அனுபவம்!

ஆலிவர் கோல்ட் ஸ்மித் ஓரிடத்தில் திறந்த அழகை விட மூடப்பட்ட அழகுக்குக் கவர்ச்சி அதிகம் என்று சொல்கிறார். நிர்வாண அழகு அழகைத் தெரிந்தும் தெரியாமலும் ஆடையால் மறைக்கும்போது அதற்கென்று தனியான வசீகரமும் கவர்ச்சியும் ஏற்படுவதை மறுப்பதற்கில்லை. இங்கேதான் உடைக்கென்று தனிச்சிறப்பு ஏற்படுகிறது.

பெண்களாகிய நமக்கு உடலில் வாளிப்பான பகுதிகள் அதிகம். இவையே பெண்மைக் கவர்ச்சியாகவும் ஆண்களை நம்பால் இழுக்கின்றன. ஆகவே, அன்புச் சகோதரிகள் தங்களைக் கவர்ச்சிப்படுத்தும் ஆடைகளை அணியக் கற்றுக் கொள்வது அவசியம். ஒவ்வொருவருக்கும் உடல் அமைப்பில் சில பகுதிகள் மேலும் கவர்ச்சிகரமாகத் தோன்றும்படி உடையணிவதில் தவறு எதுவுமில்லை.

www.indianguide.in

www.anybook.in

பெண்களின் மார்பு அவர்களுக்குரிய கவர்ச்சிப் பகுதிகளில் குறிப்பிடத்தக்கது. செக்ஸ் கவர்ச்சியில் இது சிறப்பான இடம் வகிக்கிறது. அழகான ஸ்தனங்களைக் கொண்ட பெண்கள் அது குறித்துப் பெருமைப்படுவதில் எல்லா நியாயமும் உள்ளது. இந்தக் கவர்ச்சியை மேலும் அதிகமாக்க பிரா போன்ற சாதனங்களைப் பயன்படுத்துகின்ற போது செக்ஸ் கவர்ச்சி மிகுதியாகிறது.

இதை யாராவது தவறு என்று சொன்னால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஆண்டவன் வரப்பிரசாதமாக அளித்த ஒன்று உங்களிடம் இருக்கிறது என்பதை சிறப்பாக எடுத்துக் காட்டுவதில் கூச்சப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை. கம்பன் போன்ற கவிஞர்கள் கூட இந்த அழகைச் சிறப்பித்துத்தான் சொல்கிறார்கள்.

அயோத்தியில் வாழ்ந்த பெண்களின் முலை எவ்வளவு கூராகவும் உறுதியாகவும் விளங்கியது என்பதை வர்ணிக்க வந்த கம்பன், அவர்கள் தங்கள் காதலர்களைக் கட்டித் தழுவிய போது காதலர்களின் இறுக்கமான அணைப்பில் அவர்களின் மார்பைத் துளைத்து முதுகுப்புறம் வந்து விட்டதோ என்று அச்சப்பட்ட பெண்கள் தழுவிய காதலனின் முதுகை தடவிப்பார்த்து அப்படியெல்லாம் நேரவில்லை யென்று புரிந்து கொண்டார்களாம்.

இது மிகுதியான கற்பனை என்றாலும் பெண்ணின் முலை கூராகவும் உறுதியாகவும் விளங்குவது ஓர் ரசிக்கத்தக்க அளவு என்பதை இந்த வர்ணனையில் கம்பன் எடுத்துக் காட்டி விடுகிறான்.

உலகத்தின் எல்லாக் கவிஞர்களுமே முலையழகை ரசித்துப் பாடியிருக்கிறார்கள், வல்லிக் கொடியினையும் ஓங்கி முன்னிற்கும் மார்பு என்று பாரதி வர்ணிக்கிறார். தந்தக்

www.indianguide.in

www.anybook.in

கலசங்கள் என்கிறான் ஷேக்ஸ்பியர். முலைகளே நான் வழிபடும் லிங்கம் என்கிறான் காளிதாசன். கவிஞர்களால் இப்படியெல்லாம் பாராட்டப்பட்ட சிறப்பு உங்களிட மிருந்தால் அது வெட்கப்பட வேண்டிய விஷயமா என்ன?

போலித்தனமான மனோபாவங்களுக்கு நீங்கள் மதிப்பளித்தால் செக்ஸ் இன்பத்தை ஒருபோதும் முழுமை யாக அனுபவிக்க முடியாது.

சில பெண்கள் இறுக்கமான பேண்ட் அணிவதை சிலர் ஆபாசமென்று வர்ணிக்க நான் கேட்டிருக்கிறேன். அதைப் போலவே அவர்களுடைய கவர்ச்சி வளைவுகள் தெரியும் படியான, இறுக்கமான அல்லது மெல்லிய உடைகளை அணிவதும் ஆபாசம் என்று சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் பெண்மை உறுப்புகள் அல்லது கவர்ச்சிப் பகுதிகள் காம உணர்ச்சியைத் தூண்டுகின்றன என்று சொல்கிறார்கள்.

ரொம்ப சரி, ஆண்கள் ஜட்டி போட்டுக் கொண்டோ அல்லது இறுக்கமான உடையணிந்தோ ஆண் செக்ஸ் உறுப்புகள் தெரியும்படியாகவோ இருந்தால் அது பெண்கள் மனதில் விகார உணர்ச்சியைத் தூண்டாதா என்பது பற்றி இவர்கள் பேசுவதேயில்லை.

ஆபாசம் என்பது இருபாலாருக்கும் பொதுவான விஷயமாகத் தானே இருக்க முடியும்.

இதெல்லாம் இரண்டு காரணங்களுக்காச் சொல்லப் படுவதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஒன்று, பெண்கள் ஆண்களின் உடைமைகள். ஆண்கள் விரும்புகின்றபோது மட்டும் அவர்கள் செக்ஸ் உணர்ச்சியைப் பெற்று ஆண்களுக்கு இன்பமளித்தால் போதும் என்கிற மனோபாவத்தின் விளைவு.

www.indianguide.in

www.anybook.in

இன்னொன்று, ஆண்கள் வெற்றுடம்பாகக் காட்சியளித்தாலும் பெண்கள் உணர்ச்சிவயப்பட உரிமையில்லை. கற்பு என்கிற கவசத்தால் அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஒரு ஆணின் துணையின்றி ஒரு பெண் கற்பையிழப்பது சாத்தியமில்லையென்பதை இவர்கள் மறந்தே போய் விடுகிறார்கள். குற்றத்துக்கு இரண்டு பேர் தேவை. ஆனால், குற்றவாளி ஒருவர்தான் என்பது ஒரு விசித்திரமானதாகும்.

ஆகவே பெண்கள் உடையில் ஆபாசம் என்பது ஆண்களின் பார்வையில் ஏற்படுகின்ற ஆபாசமே தவிர வேறல்ல.

அதற்குப் பெண்களாகிய நாம் பொறுப்பாக முடியாது கவர்ச்சியாகத் தோற்றமளிப்பது ஒவ்வொரு பெண்ணுடைய, உரிமை. இதை சகோதரிகள் புரிந்துகொண்டு கவர்ச்சியாகத் தோற்றமளிக்கத் தயக்கம் காட்டக் கூடாது.

நீங்கள் கவர்ச்சியாக இல்லாவிட்டால் உங்கள் கணவரின் கண்கள் வேறு கவர்ச்சிகளைத் தேட ஆரம்பித்து விடும். இது நீங்கள் கவர்ச்சியாகத் தோன்றுவதைவிட ஆபத்தானது.

ஒரு சிறிய அனுபவம்தான். அதிலிருந்த பெரிய உண்மையை நான் தெரிந்து கொண்டேன். பொதுவாக சேட்டின் துணிகள் அணிய எனக்குப் பிடிப்பதில்லை. ஒரு நிகழ்ச்சியின்போது உறவுப் பெண்ணொருத்தி சேட்டின் துணியை எனக்குப் பரிசளித்துவிட்டாள். வேறு வழியில்லாமல் அதை பிளவுஸ் தைத்துப் போட்டுக் கொண்டேன். சற்று மொத்தாகவும் வழுவழுப்பாகவும் அது இருந்ததால் அதை அணியும்போது நான் பிரா அணிவதில்லை அதனாலேயே வீட்டிலிருக்கும்போது மட்டும்தான் அந்த சேட்டின் பிளவுஸை அணிந்து கொள்வேன்.

www.indianguide.in

www.anybook.in

அன்றைக்கும் அப்படித்தான் வீட்டிலிருக்கும்போது பிரா இல்லாமல் சேட்டின் பிளவுஸை அணிந்து கொண்டிருந்தேன். இரவு படுக்கைக்கு வந்த கணவர் வழக்கம் போல என் அருகில் படுத்து அவருடைய கரங்களை என்னுடைய மார்பு மீது இழையவிட்டார். வழுவழுப்பான துணிக்கடியில் பிரா இல்லாமல் இருந்த எனது மார்புக் கோளங்கள் அவர் கைகளில் பிடிப்பட்டபோது அதன் வழுவழுப்பிலும் மிருதுத் தன்மையிலும் அவருக்குப் புதிய உற்சாகமேற்பட எனது வெறியோடு அவருடைய கரங்கள் அனுபவித்தன. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ப்ளவுஸைக் கழற்றி அவர் சேலையை எளிமையாக்குவதே எனக்குப் பழக்கம். இந்த முறை அவர் அதைத் தடுத்து சேட்டின் துணிக்கடியில் திமிறிய எனது மார்பகங்களை அப்படியே ஸ்பரிசித்து சுகம் காண்பதில் அவர் உற்சாகம் அடைந்தார்.

எனக்கு அது புதிய அனுபவமாக இருந்தது. அவருடைய விரல்களின் வேகத்தில் வழுவழுப்பான அந்தத் துணி என் மார்பில் இழைந்தபோது அதில் ஒருவகை புதிய சுகம் கிடைப்பதை நான் உணர்ந்தேன். அதற்குப் பிறகு படுக்கும் போது அணிவதற்கென்றே சேட்டின் பிளவுஸ்களை நான் வாங்கி வைத்துக் கொண்டேன்.

இந்த அனுபவத்திற்குப் பின் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. வாளிப்பான என் தொடைகளை அவர் தடவும் போது சேட்டின் பெட்டிகோட் (உள்பாவாடை) அணிந் திருந்தால் எப்படியிருக்குமென எண்ணினேன். உடனே அரை டஜன் சேட்டின் பெட்டிகோட் வாங்கி வந்து விட்டேன்.

என்னுடைய இந்த ஏற்பாட்டை அவரும் மிகவும் ரசித்தார். தடவிக் கொண்டிருப்பதிலேயே பெரும் பொழுதைப் போக்கினார். இதையெல்லாம் அன்புச் சகோதரிகளுக்கு நான் ஏன் சொல்கிறேன் என்றால், சிறு சிறு

www.indianguide.in

www.anybook.in

விஷயங்கள் என்று நாம் நினைப்பவை கூட படுக்கையறையில் செக்ஸ் இன்பத்தை மிகுதியாக்கும் சக்தி படைத்தவை என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

எனக்கும் என் கணவருக்கும் இதிலெல்லாம் எந்த விதத் தயக்கமும் கிடையாது. ஒரு நாள் அவருக்கு ஒரு வேடிக்கையான ஆசை ஏற்பட்டது. நான் டைட் பேண்ட்டும் பனியனும் போட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினார். எனக்கு அந்த உடைகளணிந்து பழக்கமில்லை. ஆனாலும் நான் மறுக்கவில்லை. காரணம் எனக்குத் தெரியும். சென்னை நகர வீதிகளில் கல்லூரிகளில் படிக்கும் கட்டழகிகள் பின்னழகும் முன்னழகும் தெரிய உடை உடுத்திச் செல்லுவதைப் பார்த்து இவர் ஏங்கியிருக்கிறார். அது அவரிடம் பல விதமான கற்பனைகளைத் தோற்று வித்திருக்கும்.

இதை நான் போட மறுத்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன நடந்திருக்கும்? அவர் டைட் பேண்ட்டும் பனியனும் போட்டுத் திரியும் பெண்களைச் சுற்றி மோப்பம் பிடித்துக் கொண்டு அலைந்திருப்பார். அதனால் அவமானம் ஏற்பட்டால் அதையும் வெளியில் சொல்லியிருக்க மாட்டார்.

அப்படியொரு விபத்து நடந்தால் என்னுடைய குறை பாடாகத்தான் எண்ணிக் கொள்வேனே தவிர அவருடைய குற்றமாகக் கருத மாட்டேன்.

என் கணவர், நான் குறிப்பிட்ட உடையில் கவர்ச்சியாகக் காட்சியளிக்க வேண்டுமென்று விரும்புகின்ற போது அதை நான் மறுத்தால் அறிவீனம் வேறெதும் இருக்க முடியாது.

நானே பௌட்டிக் ஒன்றுக்குப் போய் பேண்ட்டும் பனியனும் வாங்கி வந்தேன். அங்கேயே போட்டுப் பார்த்து

www.indianguide.in

www.anybook.in

கவர்ச்சியானதைத் தேர்ந்தெடுத்தேன். நான் அவற்றை யணிந்து கண்ணாடி முன் நின்றபோது அதன் கவர்ச்சி என்னையே கிறங்க வைத்து. என்னை அந்த உடையில் பார்த்தபோது குழந்தையைப் போல அவர் துள்ளிக் குதித்தார். என்னையே ஒரு குழந்தையாக்கிக் கொண்டார்.

நேரே எங்கே போனோமென்று நினைக்கிறீர்கள்? படுக்கையறைக்குத்தான் போனார்! கதையை மேலும் வளர்த்துவானேன்.

இன்பத்தின் புதிய உச்சத்தை நாங்கள் இருவருமே அடைந்தோம்.

மனித மனம் இருக்கிறதே அதன் கற்பனைகளுக்கு எல்லை கிடையாது செக்ஸ் என்பதும் கற்பனை சம்பந்தப் பட்ட விஷயம்தான். குறிப்பாக ஆணானாலும் பெண்ணானாலும் செக்ஸ் நிகழ்ச்சிகளைக் கற்பனைகளில்தான் முதலில் காணுகிறார்கள் அதை நிஜமாக்கிப் பார்க்கத் துடிக்கிறார்கள். நிஜம் அவர்களருகில் இருந்து வீட்டில் நிம்மதி பெறுகிறார்கள். கிடைக்காமல் போனால் தேடிப் புறப்படுகிறார்கள்.

நீங்கள் உங்கள் கணவரை உங்களுடையவராகவே வைத்துக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அவர் விரும்புகின்றபடி கவர்ச்சியாக இருப்பது அவசியம். நான் முன்னே சொன்னபடி மற்றவர்கள் அபிப்பிராயத்துக்கு இதில் வேலையில்லை.

தமிழ் இலக்கியச் சான்றோர்கள் இதை அகம் என்று அழகாகவே சொன்னார்கள். இது காமத்தை அனுபவிக்கின்ற இரண்டு பேர்களுக்கு மத்தியிலே மட்டும் நிகழ்கின்ற அந்தரங்க விஷயமானதால் இதில் மூன்றாவது மனிதனுக்கு வேலையில்லை.

www.indianguide.in

www.anybook.in

நாளைக்கு செக்ஸ் இன்பம் பூர்த்தியாகாமல் நீங்களும் உங்கள் கணவரும் விலகி வாழ நேர்ந்தால் அபிப்பிராயம் சொல்லும் மூன்றாவது மனிதர் இதில் என்ன சாதித்துவிடப் போகிறார்!

எப்படிப் பார்த்தாலும் செக்ஸ் இன்பம் என்பது முற்றிலும் கணவனையும் மனைவியையும் பொறுத்த விஷயம். இன்பத்தை அனுபவிக்க களம், காலம் என்று எதுவும் இல்லை. மனமும் செயலும் ஒருங்கிணையும் நேரமே காலம். செயல்படுகின்ற இடமே களம்.

புதிர் போல தோன்றுகிறதா? எனக்கேற்பட்ட வேறோரு இன்ப அனுபவத்தைச் சொன்னால் சுலபத்தில் புரிந்து கொள்வீர்கள்.

சுவையான அனுபவம், சுவைக்க வேண்டிய அனுபவம்.

7. நிலவில் அனுபவித்த இன்பம்!

பாரதியார் பாடலில் இந்த நான்கு வரிகளை நான் அதிகமாக ரசித்ததுண்டு. பொதுவாக, கவிஞர்கள் ரசனை உணர்ச்சி மிக்கவர்கள் என்று சொல்வார்கள். பாரதிக்கு அந்த உணர்ச்சி சற்று அதிகம். சிந்து நதிக்கரை நிலவினையும் சேர நன்னாட்டு இளம் பெண்களையும் சுந்தரத் தெலுங்கையும் ஒருங்கிணைத்து தோணி ஓட்டி மகிழும் காட்சியைச் சித்திரித்தான் பாரதி.

சேர நாட்டுப் பெண்கள் கட்டுடல் கொண்ட கவர்ச்சிப் பெண்கள். நதி வெள்ளத்தில் நிலவின் ஒளி பிரதிபலிக்கும் போது அதற்குத் தனியான அழகுண்டு. இசைக்கு உணர்ச்சி களைத் தூண்டும் சக்தி அதிகம். தெலுங்கின் இனிமையை ரசித்தவன் பாரதி. ஆகவே அவன் கண்ட செக்ஸ் காட்சியில் இவையனைத்தையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறான்.

www.indianguide.in

www.anybook.in

பாரதியின் வரிகளை நான் ரசிப்பது உண்டென்றாலும் காதலுக்கும் நிலவுக்கும் உள்ள தொடர்பை நான் முழுமை யாக உணர்வதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பம் சுவையானது.

ஒரு முறை நான் என் கணவருடன் பூம்புகாருக்குச் சென்றிருந்தேன். மாதவி வீணை மீட்டி மகிழ்ந்த நிலப்பரப்பு அது என்பது என்னுடைய நினைவுக்கு வந்தது. இந்த மணற்பரப்பில்தான் கோவலனும் மாதவியும் கொஞ்சி மகிழ்ந்திருக்க வேண்டுமென நினைத்துக் கொண்டேன். நினைவுகள் காதல் சுவைக்குச் சென்றுவிட்டதால் நெருக்கமாக அமர்ந்திருந்த என் கணவர் மீது விழிகளை ஓட்டினேன்.

ஒரு கணம் தயக்கம். அவரைக் கோவலனாக எண்ணிக் கொண்டாலும் என்னை மாதவியாக எண்ணிக் கொள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லை. உரிமையுடையவள் கண்ணகி. இவ்வாறு நான் எண்ணிக் கொண்டிருந்தபோதே மாதவியின் பக்கம் கோவலனின் மனம் ஏன் திரும்பிற்று என்று எண்ணம் இடலானேன். கண்ணகியைத் திருமணம் செய்து கொண்டு அதிக காலம் ஆகாத நிலையில்தான் மாதவியிடம் மனதைப் பறிகொடுக்கிறான் கோவலன்.

பறிகொடுத்தான், அனுபவித்தான், திரும்பினான் என்றும் கதையில்லை. அவள் வீடே பழியாகக் கிடந்து விட்டான். மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விதையே, கரும்பே, தேனே என்றெல்லாம் கண்ணகியின் அழகை வர்ணித்து மகிழ்ந்தவன், மாதவியிடம் மனதைப் பறிகொடுக்க என்ன காரணமென்று ஒரு கணம் யோசித்தேன்.

அவளுடைய நாட்டியத் திறமை, இசைப் புலமை, நளின உபசாரம் ஆகியவை அவனைக் கட்டிப் போட்டு விட்டது. கண்ணகியைப் பற்றி மற்றவர்கள் என்ன

www.indianguide.in

www.anybook.in

நினைக்கிறார்களோ எனக்குத் தெரியாது. தனது செக்ஸ் கவர்ச்சியால் கோவலனைத் தன்னிடமே வைத்துக் கொள்ள அவள் தவறிவிட்டாளென்றே எனக்குத் தோன்றுகிறது.

கண்ணகி கற்புத்திறம் கொண்டவள் என்பதில் எனக்கு மறுப்பு இல்லை. கோவலனின் கற்பைக் காப்பாற்றுகின்ற சக்தி அதற்கு இல்லாமல் போயிற்று என்பது உண்மை.

இதை அன்புச் சகோதரிகள் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். ஒரு பெண் தான் மட்டும் கற்புடைய வளாக இருந்து தன் கணவனை ஊரெல்லாம் மேயவிடுவதில் அர்த்தமில்லை. எனவேதான் அந்தப் பளிங்கு நிலவொளியில் பூம்புகார் கடற்கரை மணலில் என் கணவரோடு நான் வீற்றிருந்தபோது மாதவியாக என்னை நினைத்துக் கொள்ள என் மனம் இடந்தரவில்லை.

பாத்திரத்தில் நான் கண்ணகியாகவே இருக்க விரும்பினாலும் கொள்ளுகின்ற உறவிலும் கொண்ட வனுக்குக் கிளுகிளுப்பூட்டுவதிலும் மாதவியாகவே இருக்க ஆசைப்பட்டேன்.

இதெல்லாம் இலக்கியப்பூர்வமான சிந்தனைகள் என்றாலும் என் கணவர் ''என்ன ப்ரியா!'' உன்னை மறந்து உட்கார்ந்திருக்கிறாயா?'' என்று கேட்டவுடனே சிலப்பதிகாரக் கற்பனைகளிலிருந்து நான் விடுபட்டேன்.

''நிலவொளியில் நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய் தெரியுமா?'' என்று அவர் என்னைக் கேட்டவுடன் எனது உள்ளம் செக்ஸ் கற்பனைகளில் சிறகடித்துப் பறக்க தொடங்கியது.

நிலவொளிக்கு செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டுகின்ற சக்தி இருக்க வேண்டுமென எனக்குத் தோன்றியது. இயற்கையாக பொன்னிறமான என்னுடைய மேனி நிலவில் குளித்த நிலையில் புதுப் பொலிவுடன் திகழ்வதைப்

www.indianguide.in

www.anybook.in

போலவே எண்ணினேன். அவர் பார்த்த விஷமப் பார்வையும் அதைத்தான் எனக்கு உணர்த்தியது. அவர் தன்னுடைய பார்வையாலேயே என்னைத் துகிலுரிவதை என்னால் உணர முடிந்தது.

ஒன்றும் பேசாமல் எழுந்து நாங்கள் தங்கியிருந்த விடுதியை நோக்கி நடக்கத் தொடங்கினேன். எனது நடையழகை அவர் கவனித்துக் கொண்டிருப்பதை அவரை திரும்பிப் பார்க்காமலே என்னால் உணர முடிந்தது. அவர் ரசிக்க வேண்டுமென்பதற்காகவே என்னுடைய பின்னழகு கள் ஜதியோடு அசைய, நான் நடை பயின்றேன். நான் விடுதியைச் சென்றடைந்த சற்றைக்கெல்லாம் அவரும் வந்து சேர்ந்தார்.

அந்த விடுதியில் திறந்தவெளி மாடி ஒன்றிருந்தது. அங்கே போய் உட்காரலாமென்றேன்.

''உட்கார்ந்து?'' என்று முடிவு பெறாத ஒரு கேள்வியைக் கேட்டார்.

நான் பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே மாடிப் படிகளில் ஏற, அவரும் என்னைப் பின் தொடர்ந்தார். மாடியில் நிலவு பட்டுப் போல் காய்ந்து கொண்டிருந்தது. எங்கும் ஒரே ஒளி வெள்ளம். ஏதோ கந்தர்வலோகத் தம்பதிகள் போல நாங்கள் அங்கே நின்றுகொண்டிருந்தோம். கடற்கரை மணலில் பார்வையால் செய்ததை இப்போது அவர் நிஜமாகவே செய்ய ஆரம்பித்தார். என்னை மூடி மறைத்திருந்த உடைகள் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே என்னை விட்டுப் பிரிந்தன. தன்னுடைய உடைகளுக்கு அவரும் விடை கொடுத்தனுப்பினார்.

நிலவில் குளிக்கும் நிர்வாண அழகை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ என்னவோ! அது ஒரு கண் கொள்ளாக்

www.indianguide.in

www.anybook.in

காட்சி. எனது உடலின் அழகை அப்போது நானே ரசித்தேன். பால் வண்ணப் பளிங்குக் கலசங்களாக என் மார்பகங்கள் தகதகத்தன.

அவரும் சற்றுத் தொலைவில் அப்போலோ சிலை போல ஆண்மை எழுச்சியுடன் நின்றுகொண்டிருந்தார். நிர்வாணம் எவ்வளவு புனிதமானது என ஒரு கணம் நான் மெய்சிலிர்த்தேன். பரஸ்பர ரசனையில் செதுக்கிய சிலைகள் போல இருவரும் நின்றுகொண்டேயிருந்தோம் காலம்கூட ஸ்தம்பித்து விட்டதைப்போன்ற ஒரு பிரமை

என்னுள்ளே ஏதோ ஒன்று ஊற்றெடுத்து எனது மேனியை சிலிர்க்க வைக்கிறது. முடுக்கி விட்ட பொம்மைகளைப் போல இருவரும் ஒருவரையொருவர் நோக்கி நகர்ந்து இன்ப அணைப்பில் கட்டுண்டோம்.

நிலவுப் பிரவாகத்தில் மூழ்கி மயங்குவது போன்ற ஓர் உணர்வு அவருடைய கரங்கள் எனது முதுகில் மென்மையிலிழைந்து பின்னழகை, தசைக் கோளங்களைப் பற்றித் தன்னுடன் இறுக்கியபோது அவரது ஆண்மை பலத்தை என் பெண்மை உணர, அவரையும் என்னோடு சேர்த்து அணைத்தபடியே கீழே சாய்ந்தேன்.

மேலே நிலவு இந்தக் காட்சியைப் பார்த்து நாணியதைப் போலதுண்டுத்துணி போல மிதந்து கொண்டிருந்த மேகத்தில் தன்னை மறைத்துக் கொண்டது.

இவர்கள்தான் வெட்கங்கெட்டு உடைகளை உதறி விட்டார்கள், நாமும் இவர்கள் முன்னிலையில் நிர்வாணமாக இருக்க வேண்டாமென எண்ணி மேகத்துணியை நிலவு போர்த்திக்கொண்டது போல எனக்குத் தோன்றியது.

கீழே மல்லாந்து படுத்திருந்த என்னால்தான் அந்தக் காட்சியை ரசிக்க முடிந்தது. ''சந்திரன்கூட வெட்கப்பட்டு

www.indianguide.in

www.anybook.in

உடலை மறைத்துக் கொண்டு விட்டான். பார்த்தீர்களா?'' என்று நான் அவரைக் கேட்கவும், அவர் முத்துப் பல் தெரியச் சிரித்து ''அப்படி ஒன்றும் இல்லையே. என் முன்னாலுள்ள சந்திரன் ஆம்பல் இதழ்களையல்லவா விரித்திருக்கிறான்'' என்றார்.

பூம்புகாருக்கு வந்தவுடன் இவரும் ஒரு கவியாகி விட்டாரென்று எனக்கு தோன்றியது. என்னுடைய முகத்தை சந்திரனுக்கும் எனது சிவந்த உதடுகளை ஆம்பல் இதழ்களுக்கு ஒப்பிட்டு கவித்துவமாகப் பேச ஆரம்பித்து விட்டார்.

வாய்தான் கவிதை பேசியதே தவிர செக்ஸ் விஷயங்கள் துரித கதியில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. நிலவின் ஒளியில் அனுபவித்த செக்ஸ் இன்பத்தின் உணர்ச்சிச் சுழல் எனக்குத் தூண்டியபோது அந்த வேகத்தில் என்னை மறந்து இயற்கையோடு இரண்டறக் கலந்துவிட்ட சுகத்தை நான் அனுபவித்தேன்.

என்னிடமிருந்து அவர் தன்னை விலக்கிக் கொள்ள முடியாதபடி இறுக்கமாக அவரையணைத்து மெய் மறந்து படுத்துக் கிடந்தேன். இந்தக் காட்சியில் மனதைப் பறி கொடுத்த சந்திரனும் காம உணர்ச்சி தாங்கமாட்டாதவனாக நாணத்தை இழந்து மேகத்தை விலக்கி அந்தக் காட்சியை இப்போது ரசிக்கத் தொடங்கியிருந்தான்.

ஒருவர் அணைப்பில் இன்னொருவர் கட்டுண்டு அந்தப் பளிங்குத் தரையில் வேகத்தோடும் வெறியோடும் உருண்ட போது அதனால் விளைந்த அழுத்தத்தில் கடல் அலைகள் போல இன்ப அலைகள் உடலெங்கும் வியாபிக்க களைத்து வேர்த்துப் போனோம்.

இதென்ன, ''நிலவுக் காதலா?'' என்றார் அவர்.

''இல்லையில்லை, காதலின் நிலவு!'' என்றேன் நான்.

www.indianguide.in

www.anybook.in

அடுத்து நாங்கள் அருகருகே மல்லாந்து படுத்தபடியே நீண்ட நேரம் நிலவை ரசித்துக் கொண்டிருந்தோம். எனக்கு நிலவைப் பார்ப்பதற்கே கொஞ்சம் வெட்கமாகக்கூட இருந்தது. ஆனால், அந்த நிலவு மட்டும் போக்கிரித்தனமாகத் தனது கதிர்க் கரங்களை வீசி எங்கள் மேனியை வருடிக் கொண்டிருந்தது.

அதற்குப் பிறகு இருவரும் போய்க் குளித்துவிட்டு மாற்றுடையணிந்து மீண்டும் மாடிக்கு வந்தோம். இரவு நேரமாகிவிட்டதால் நிலவின் ஒளி முன்பை விட இன்னும் பிரகாசமாக இருந்தது. நான் மெல்லிய துணியாலான மேக்ஸி அணிந்திருந்தேன். அவர் பைஜாமாவும் ஜிப்பாவும் போட்டிருந்தார்.

அவர் உட்கார அவருடைய மடியில் தலை வைத்து நான் நீட்டிப் படுத்தேன். என்னுடைய உடல் இப்போது இனம் புரியாத இன்ப நிம்மதியில் திளைத்துக் கொண்டிருந்தது. அவருடைய கரங்கள் அன்புடன் என் மேனியில் தவழ்ந்த போது அதில் வெறித்தனமிருக்கவில்லை. ஒரு ஆன்மநேய உறவின் ஸ்பரிச சுகம்தான் அதில் இருந்தது.

அன்புச் சகோதரிகளே! செக்ஸ் இன்பத்தை முழுமை யாக அனுபவித்த பிறகு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நிலவுகின்ற உறவில் தெய்வீக தன்மையை நீங்கள் உணர முடியும். இரண்டு உடல்கள் சங்கமிக்கும் நிகழ்ச்சிதான் அதுவென்றாலும் அதன் விளைவாக இரண்டு உள்ளங்களும் வேறுபாடின்றி ஒன்றில் ஒன்று ஐக்கியப்பட்டு விடுகிறது என்பது உண்மை.

அன்பு பூம்புகார் நிலவொளியில் எனக்கு கிடைத்த சுகத்தில் அதைத்தான் நான் உணர்ந்தேன். ஆரம்ப ஈர்ப்புக்கு உடல் கவர்ச்சி காரணமாக இருந்தாலும் அந்த ஈர்ப்பின்

www.indianguide.in

www.anybook.in

விளைவாகக் கிடைக்கின்ற திருப்தி வெறும் உடல் திருப்தி மட்டுமல்ல, அது ஒரு உன்னதமான மன நிறைவும் ஆகும்.

செக்ஸ் என்பது ஒரு தெய்வீக அனுபவம். அதனாலேயே ஆண்குறி வழிபாடும் பெண்குறி வழிபாடும் சமூகம் நாகரீக வளர்ச்சி பெற்ற காலகட்டத்தில் உருவாயிற்று என்று எனக்கு தோன்றுகிறது.

ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் உடலை இன்னொருவர் ரசிப்பது ஆரோக்கிய மனவளர்ச்சியின் ஆரம்பம். குறிப்பாகப் பெண்களாகிய நாம் இதை உணராமல் போகும்போதுதான் தாம்பத்திய விபத்துகள் ஏற்படுகின்றன. கண்ணகியால் கொடுக்க முடியாத ஒன்றை மாதவியால் கொடுக்க முடிந்தது. கண்ணகியிடம் இருந்த அழகை கோவலன் நேசித்தான். மாதவியிடம் இருந்த அழகை அவன் ரசித்தான்.

அந்த ரசனைக்கு வேகம் அளிக்கின்ற கலைகளையும் அவள் கற்றிருந்தாள். ஆடினாள், பாடினாள், தனது அலங்காரத்தால் அவனைத் தன்வயப்படுத்தினாள். கண்ணகியிடம் குடும்பப் பாங்கை கோவலன் கண்டிருக்கக் கூடும். மாதவியிடம்தான் முழுமையான செக்ஸ் சுகம் கிடைக்குமென அவன் நம்பினான்.

வீட்டுப் பராமரிப்பு மட்டும் குடும்பம் ஆகிவிடாது. குடும்பத்தின் உறுதியான அடித்தளம் படுக்கையறையில்தான் உருவாக்கப்படுகிறது. திருமண நிகழ்ச்சியே உடல்களின் நெருக்கம்தான். அதற்குப் பிறகுதான் கணவனும் மனைவியும் ஒருவர் உள்ளத்தை மற்றொருவர் புரிந்து கொள்ள முடியும். உடலுறவில் ஏற்படும் திருப்தியே மனக்கதவைத் திறக்கிறது. செக்ஸ் இன்பம் முழுமையாகும்போது உள்ளங்கள் ஒன்றி விடுகின்றன.

www.indianguide.in

www.anybook.in

படுக்கைச் சுகத்தில் குறை நிகழாமல் இருந்தால் வாழ்க்கையின் ஏனைய குறைகளை அலட்சியப்படுத்தும் மனோபாவம் தானாகவே வந்துவிடுகிறது.

மாதத்தில் பதினைந்து தினங்கள் நிலவொளியைப் பூரணமாக அனுபவிக்கலாம். பௌர்ணமிக்கு முன்னால் ஏழு தினங்களும் பௌர்ணமிக்குப் பின்னால் ஏழு தினங்களும் நிலவின் சோபையை அனுபவிக்க நமக்குக் கிடைத்த காலங்கள். பௌர்ணமிக்குப் பின்னால் பின் இரவிலும் பௌர்ணமிக்கு முன்னால் முன் இரவிலும் நிலவின் பரிபூரண சுகத்தை நாம் பெற முடியும்.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய தினங்களில் பெண்களின் செக்ஸ் உணர்ச்சி மிகுதியாக இருக்குமென்பது ஒரு கணிப்பு. அமாவாசையை ஒட்டிய தினங்களில் செக்ஸ் இன்பத்தை அறைக்குள் அனுபவித்தால் பௌர்ணமியை ஒட்டிய தினங்களில் நிலவொளியில் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

இதைத்தான் சென்ற அத்தியாய இறுதியில் இட மென்றும் காலமென்றும் குறிப்பிட்டேன். நிலவொளி என்பது காலம் பற்றிய ஒன்றாயினும் அந்தக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்குமிடமும் ரசனையோடு கூடியதாக இருக்குமானால் அதிலிருந்து கிடைக்கும் இன்பம் மதிப்பு அதிகம்.

இடத்திற்கென்றும் தனியான சிறப்பு உண்டு. ஏதோ செக்ஸ் இன்பம் அனுபவிப்பதை அட்டவணை போட்டுத்தான் அனுபவிக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை. அது எங்கும் நிகழலாம், எப்போதும் நிகழலாம்.

என்னுடைய அனுபவத்தில் நீங்கள் கற்பனை செய்யாத இடத்தில்கூட அது நிகழ்ந்திருக்கிறது. இப்படி நான் சொன்ன

www.indianguide.in

www.anybook.in

வுடன் ப்ரியா காமவெறிபிடித்த பெண்ணாக இருப்பாளோ என்று நீங்கள் பதட்டமடைய வேண்டாம். காம சுகத்தை கொச்சைப்படுத்துகின்றவர்கள்தான் அதற்கு வெறி என்கிற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

செக்ஸ் உணர்ச்சி சகுனம் பார்த்து வர வேண்டுமென்று சொன்னால் அதைப் போன்ற வேடிக்கையான கற்பனை வேறெதுவும் இருக்க முடியாது.

உங்களுக்குப் பிடித்த ஒரு பலகாரத்தை சாப்பிட வேண்டுமென உங்களுக்கு ஆசை தோன்றினால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அதைத் தயாரிக்கத் தேவையான பொருள்களை வாங்கித் தயாரித்து விடுகிறீர்கள் இதற்கு நீங்கள் கூச்சப்பட வில்லையானால் செக்ஸ் உணர்ச்சி தோன்றுகின்றபோது அதை அனுபவிக்கக் கூச்சப்பட வேண்டிய அவசியமில்லை.

நாள் நட்சத்திரம் பார்த்து அனுபவிப்பதல்ல செக்ஸ். அதற்கான மன நிலை தோன்றுகின்றபோது அனுபவித்தால் தான் முழு இன்பம் கிடைக்கும்.

நான் அப்படித்தான்! கூச்சப்படாமல் கேளுங்கள்.

8. மனமுண்டானால் மார்க்கமுண்டு!

ஒரு பெண் அழகாக இருக்கிறாளென்று நமது சமுதாயத்தில் ஆண் தைரியமாகச் சொல்லிவிட முடியாது. ஒரு ஆண் ஆண்மைப் பொலிவோடு இருக்கிறான் என்று பெண்ணும் வாய்விட்டுப் பேசிவிட முடியாது. அப்படிப் பேசினால் அதை ஒரு செக்ஸ் பலவீனம் என்று கருதுகிறோம். ஒழுக்கத்தில் ஒரு மாற்றுக் குறைந்துவிட்டது போல நினைக்கிறோம். ஆனால், வெளியில் சொல்வதைத்தான் தடுக்க முடியுமே தவிர மனதில் நினைப்பதைத் தடுக்க முடியாது.

www.indianguide.in

www.anybook.in

நான் இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால் செக்ஸ் என்பதே ஒரு பாப காரியம், குற்றம் என்கிற மனோபாவம் நம்மிடம் ஆழமாக இருக்கிறது. ஒரு பெண்ணின் அழகை ஆண் ரசிப்பதும், ஆணின் அழகை பெண் ரசிப்பதும் தவிர்க்க முடியாத மன உணர்வுகளென்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இதில் அடிப்படையான விஷயம் என்னவென்றால், ஒரு பெண் ஆணை எப்போதுமே தன்னுடையவனாக வைத்துக் கொள்வதுதான். அதற்கான மனோபாவத்தை அவள் வளர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஆண்கள் எளிதில் செக்ஸ் வயப்பட்டுவிடுவார்களென்பதால் ஒரு பெண் தன்னுடைய சாகசங்களின் மூலம் சுலபத்தில் அவனைத் தன் வயப்படுத்திவிட முடியும். உங்கள் கணவரை நீங்கன் வயப்படுத்தத் தவறிவிடுகிறபோது அந்த இடத்தைச் சுலபத்தில் வேறொரு பெண்ணால் ஆக்கிரமித்துக் கொண்டு விட முடியும். இந்த உண்மையினைப் பல சகோதரிகள் உணர்வதேயில்லை.

செக்ஸ் தூண்டல் எப்போதும் ஏற்படலாம். எந்த இடத்திலும் ஏற்படலாம். நாணம், வெட்கம் என்பதெல்லாம் பெண்களுக்கு வேண்டியதுதான். அவற்றையும் ஆண்களைக் கவருகின்ற ஆயுதங்கள் ஆக்கிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். ஆண் செக்ஸ் உணர்ச்சி பெறுகின்றபோது வெட்கத்தையும் நாணத்தையும் காரணம் காட்டி ஒரு பெண் ஒதுங்கிக் கொண்டு விட்டால் அந்த ஆண் ஏமாற்றுத்துக் குள்ளாகிறான். செக்ஸ் ஏமாற்றம் அவனுக்கு ஏற்படுகின்ற போது தனது செக்ஸ் உணர்ச்சியை எளிமையாகத் திருப்தி செய்து கொள்ளும் இடங்களை அவன் தேடத் தொடங்கி விடுகிறான். சமூக அமைப்பில் பல பெண்கள் அதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களின் நோக்கம் எதுவாக வேண்டு

www.indianguide.in

www.anybook.in

மானாலும் இருக்கலாம். ஆனால், ஆணைப் பொறுத்த வரையில் அவனது தேவையை அவர்கள் பூர்த்தி செய்கிறார்களென்பதால் அவனுக்கு அவர்கள்மீது நாட்டம் ஏற்பட்டுவிடுகின்றது.

அன்புச் சகோதரியே! நான் மேலே சொல்லியுள்ள விஷயத்தை எப்போதும் கவனத்தில் வைத்துக் கொள். செக்ஸ் விஷயத்தில் உன் கணவரின் குறிப்பறிந்து செயல்படுவதில் நீ எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். நான் அப்படித்தானிருக்கிறேன். அதனால் எனக்கு ஏற்படும் அனுபவங்களும் இனிய அனுபவங்களாகவே இருக் கிறன்றன. என் கணவரோடு செக்ஸ் இன்பம் அனுபவிக்க எனக்குக் கிடைக்கின்ற எந்த சந்தர்ப்பத்தையும் நான் நழுவவிடுவதில்லை. நான் நழுவ விட்டால் என்னிடமிருந்து அவர் நழுவிப் போய்விடுவார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

ஆகவே இந்த விஷயத்தில் காலம், இடம் பற்றியும் நான் கவலைப்படுவதேயில்லை. அதற்காகப் பலர் முன்னிலையில் நாங்கள் விரசமாக நடக்கிறோம் என்று அர்த்தமில்லை. செக்ஸ் தேவை ஏற்பட்டால் தனிமையை ஏற்படுத்திக்கொள்வது அப்படியொன்றும் கஷ்டமான காரியமில்லை.

நான் சொல்லப் போகும் இந்த சம்பவத்தைக் கேட்டால் நீங்கள் ஒருவேளை சிரிபபீர்கள். விவரம் தெரிந்த பிறகு ரசிப்பீர்கள்.

எங்கள் வீட்டில் ஒரு மங்கல நிகழ்ச்சி பதினைந்து இருபது தினங்களாக வீட்டில் ஜே ஜே என்று ஒரே கூட்டம். அவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பரிதாபமாக இருந்தது. நான்கு நாட்கள் என்பதே அவருக்கு நீண்ட

www.indianguide.in

www.anybook.in

இடைவெளி. இப்போது பதினைந்து தினங்களுக்கு மேலாகிவிட்டதால் அவருடைய தவிப்பு எனக்குத் தெரியும். ஆனால், நான் என்ன செய்ய முடியும்?

அதே சமயம் எனக்கு ஓர் அச்சமுண்டு. இவரை இப்படியே விட்டுவிட்டால் இவருடைய கவனம் வேறு எங்காவது திரும்பிவிடுமோ என்கிற அச்சம்தான் அது. கடைக்குச் செல்வது போல பாசாங்கு செய்து வெளியே போகலாம். எங்கே போய் என்ன செய்ய முடியும்.

திடீரென்று எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. கொஞ்சம் செலவாகும். பரவாயில்லையென்று எண்ணினேன். அலுவலக வேலைகளை சில சமயங்களில் வீட்டுக்கு கொண்டு வந்து இவர் செய்வது வழக்கம். இப்போது அந்த வேலைகளையும் வீட்டில் செய்ய முடியாது; கூட்டம்.

'ஓட்டலில் ஒருநாள் அறை எடுத்துக்கொண்டு உங்கள் வேலைகளையெல்லாம் முடித்து விடுவதுதானே' என்று பல முன்னிலையில் யோசனை சொன்னேன்.

நான் சொன்னது மற்றவர்களுக்கும் நியாயமாகப் பட்டது. இவர்கள் கூட்டமாக வந்திருப்பதால் அவருடைய வேலை கெட்டுவிடக் கூடாதே என்று இவர்களுக்கு ஓர் அனுதாபம். உடனே பலரும் எதார்த்தமாக என்னுடைய யோசனையை ஆமோதித்தார்கள்.

''செலவாகுமே'' என்றார் அவர், அசடு வழிய.

''நிகழ்ச்சி செலவில் அதையும் சேர்த்து எழுதிவிடலாம்'' என்று நான் வேடிக்கையாகச் சொல்லவும், மற்றவர்களும் அதை ரசித்துச் சிரித்தார்கள்.

அவர் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு ஒப்புக் கொண்டார். அவர் அலுவலகத்துக்குப் புறப்படும்போது

www.indianguide.in

www.anybook.in

மெத்தக் கஷ்டப்பட்டுத் தனிமையை ஏற்படுத்தி, ''அறையை எடுத்தவுடன் எந்த ஓட்டல், என்ன எண்ணுள்ள அறை என்பதை மட்டும் மறக்காமல் தகவல் கொடுங்கள்'' என்றேன்.

''அது ஒன்றுதான் பாக்கி'' என்றார் எரிச்சலாக. அவர் எரிச்சலுக்குக் காரணம் எனக்குப் புரிந்தது. நான் சிரிப்பை அடக்கிக்கொண்டு, 'நீங்கள் எங்கே இருக்கிறீர்களென்பது தெரிந்தால்தானே அவசரத் தகவல்கள் இருந்தால் தெரிவிக்க முடிம்'' என்றேன்.

''சரி, சரி. சொல்லித் தொலைக்கிறேன்'' எனக் கூறிவிட்டு வேகமாகப் புறப்பட்டார் அவர்.

அவருடைய தகவலுக்காக நான் ஏக்கத்தோடு காத்திருந்தேன். தகவலும் கிடைத்தது. அன்று மாலை நான் டீக்காக டிரஸ் செய்து கொண்டு புறப்பட்டபோது என் சித்தி மகளொருத்தி எனக்கு துணைக்கு வருவதாகச் சொன்னவுடன் எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. துணைக்கு வருகிறாளாம் இவள்! எனக்குக் கொஞ்சம் தர்மசங்கடமாக இருந்தது. ஏதோ சொல்லி ஒருவாறு சமாளித்து வெளியே புறப்பட்டேன். வழியில் சிநேகிதிகள் யாரையும் சந்தித்துவிடக் கூடாதே என்கிற அச்சம்.

போகும் வழியிலேயே அவருக்குப் பிடித்தமான மல்லிகை மலர்களை நிறைய வாங்கித் தலையில் வைத்துக் கொண்டேன். தனிமையில் ஓட்டல்களுக்குப் போய் எனக்குப் பழக்கமில்லை. ஆசை வெட்கமறியாது என்பார்கள். தவறான அறையில் போய் கதவைத் தட்டிவிடக்கூடாதே என்றொரு பயம். ரிசப்ஷனில் போய் அவர் தங்கியிருக்கும் அறையை உறுதி செய்து கொண்டேன்.

ரிசப்ஷனில் இருந்த பையன் ஒரு மாதிரியாக என்னை ஏற இறங்கப் பார்த்தான். அவருடைய மிஸஸ் என்று நானே

www.indianguide.in

www.anybook.in

வலிந்து சொல்லிக் கொண்டேன். அறையை அடைந்து காலிங் பெல்லை அழுத்தினேன். கதவை திறந்து அவர் என்னைப் பார்த்து விழித்தார். உள்ளே ஃபைல்கள் இறைந்து கிடந்தன.

''ப்ரியா நீ...'' என்றார்.

''முதலில் கதவைச் சாத்துங்கள்'' என்றேன்.

''ஏதாவது சாமான்கள் வாங்க வந்தாயா?'' என்றார்.

''சரியான அசடு நீங்கள். ஃபைல்களையெல்லாம் கட்டி மூலையில் வையுங்கள் என்றேன். அவருக்கு ஒன்றும் புரிய வில்லை. திருதிருவென்று விழித்தபடி ஃபைல்களை ஓரமாகத் தள்ளினார்.

நான் சிரித்துக்கொண்டே கட்டிலில் போய் சாய்ந்து படுத்தேன் அவருக்கு இன்னமும் குழப்பமும் தெளிய வில்லை. ''ஏன் விழித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி வந்து உட்காருங்கள்'' என்றேன்.

''உன்னோடு யாரும் வரவில்லையா?'' என்றார்.

''ஆசை இருந்தால் போதுமா? புத்திசாலித்தனம் வேண்டாமா? நாற்பது ரூபாய் செலவழித்து ரூம்போடச் சொன்னது இந்தக் காகிதக் குப்பைகளைப் பார்ப்பதற்காகவா?''

அவருக்கு ஞானம் பிறந்து விட்டது. துள்ளிக் குதித்தார். ''இரு, ப்ரியா வந்து விடுகிறேன்'' எனக் கூறிவிட்டு பாத்ரூமுக்குள் ஓடினார். ஷவரிலிருந்து தண்ணீர் கொட்டும் ஓசை கேட்டது. நான் சிரித்துக் கொண்டேன். பாவம், பகலெல்லாம் வேர்க்க விறுவிறுக்க இந்த ஃபைல்களைக் கட்டி அழுதிருக்கிறார்.

குளித்துவிட்டு சந்தன சோப் மணக்க என்னருகில் வந்தார். அதற்குப் பிறகு அவர் என்னைப் பேச விடவில்லை. பதினைந்து நாள் வேகத்தையும் வெறியையும் அவருடைய

www.indianguide.in

www.anybook.in

செயல் ஒவ்வொன்றிலும் என்னால் உணர முடிந்தது. உள்ளபடியே அன்றைக்கு நான் அனுபவித்த இன்பம் புதுமையானதாக இருந்தது. ஒரு பெண்ணை பலாத்காரம் செய்வது போல அவர் என்னைப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் பலவந்தத்திலும் ஒரு சுகமிருப்பதை நான் அனுபவித்தேன்.

கூந்தல் கலைந்தது. ஆடை குலைந்து மல்லிகை மலர்கள் படுக்கையெங்கும் சிதறின. அவர் என்னை விட வில்லை. வீட்டின் மங்கல நிகழ்ச்சி முடியும் வரையில் மறுபடியும் வாய்ப்புக் கிடைக்காது என எண்ணியோ என்னவோ அவர் என்னை எழுந்திருக்க விடாமல் தழுவிக்கிடந்தார்.

படுக்கைப் போருக்குப் பிறகு இருவரும் களைத்துப் படுத்திருந்த நிலையில் நான் கேட்டேள். ''ரூமை எப்போது காலி செய்யப் போகிறீர்கள்'' என்று.

''வீட்டில் விழா முடியும் வரையில் காலி செய்யும் உத்தேசமில்லை'' என்றார் அவர்.

''ஆசைதான், இன்றைக்கு நான் வந்ததே பெரும்பாடாகி விட்டது. சித்தி பெண் வேறு என்னோடு வருவதாகப் பிடிவாதம் பிடித்தாள். ஆபீஸுக்குப் போவதாகப் பொய் சொல்லிவிட்டு தினமும் இங்கு வந்துவிடலாமென்று பார்க்கிறீர்களாக்கும்.''

''எனக்கு லீவ் இருக்கிறது'' என்றார்.

''உங்களுககு லீவ் இருந்தா போதுமா? நான் எப்படி வீட்டுக்கு லீவ் போட முடியும்?''

''சாயங்காலத்தில் வந்துவிடேன்.''

''நல்ல யோசனை! இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவீர்களே. இன்றைக்குக்கூட நான் வீட்டுக்குத்

www.indianguide.in

www.anybook.in

திரும்பும்போது ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேண்டும்.''

''ஒரு நாள் கூத்துதானா?'' என்றார் அவர்

''இவ்வளவு நாள் நீங்கள் செய்தது ஒரு வாரம் தாங்காதா?'' என்று நான் கேட்கவும், அவர் புதுவேகம் பெற்றவராக மீண்டும் என் உடல்மீது இழைய ஆரம்பித்தார். அவர் சொன்னார். ''ரூம் எடுக்கச் சொல்லி நீ சொன்னபோதே விஷயத்தைக் குறிப்பாக உணர்த்தியிருந்தால் தண்டமாக இந்தப் ஃபைல்களை இங்கே கொண்டு வந்திருக்க மாட்டேனல்லவா?''

''பகலெல்லாம் என்ன செய்திருப்பீர்கள்?''

''நீ வரப் போகிறாய் என்ற கற்பனையிலேயே பொழுதை ஓட்டியிருப்பேன்.''

கடிகாரத்தைப் பார்த்தேன். நான் இவருடைய அறைக்குள் நுழைந்து, இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. தலைவாரி உடல்களைச் சரிபடுத்திக் கொண்டே, கலைந்துபோன பொட்டைத் திருத்திக் கொள்வது தான் கஷ்டமாக இருந்தது. சிதறிய பூக்களை எடுத்து ஜாக்கிரதையாக குப்பைத் தொட்டியில் போட்டேன். இருவரும் கீழே போய் சாப்பிட்டோம்.

அவரைப் பிரிவது எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. ''நானும் இப்போதே வீட்டுக்கு வந்துவிடுகிறேன்'' என்றார். என்னைப் பார்த்துக் கொண்டாவது இருக்காலமே என்கிற ஆசை அவருக்கு.

''பரவாயில்லை. வீட்டுக்கு வந்து விடுங்கள். இரண்டு பேரும் சேர்ந்து போக வேண்டாம். இரவு ஒன்பது மணிக்கு மேல் நீங்கள் வந்தால் போதும்.''

www.indianguide.in

www.anybook.in

அவர் ஏக்கத்தோடு என்னைப் பார்த்தார். எனக்கும் புரிந்தது. ''தேவைப்பட்டால் இன்னொரு நாளைக்கு ரூம் போட்டுக் கொள்ளலாம். அதுதான் வழி தெரிந்துவிட்டாதே. ஆனால், மறுபடியும் இதே ஓட்டலில் ரூம் போடாதீர்கள். இப்போதே ரிசப்ஷன் பையன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.''

அவர் ரசித்துச் சிரித்தார். நானும் மன நிறைவோடு வீட்டுக்குப் புறப்பட்டேன்.

சில சகோதரிகள் நினைக்கலாம். இரண்டு மூன்று வாரம்கூடதன்னடக்கமில்லாத ஆண்கள் என்ன ஆண்களென்று!

தன்னடக்கத்தோடு உங்கள் கணவர் இருப்பதாக நீங்கள் நம்பி ஏமாந்து போகாதீர்கள். ஆண்கள் தங்கள் மனைவியை மட்டுமே நம்பியிருப்பதாக எண்ணுவது ஒரு தப்புக் கணக்கு.

எதற்காக ரிஸ்க் எடுக்க வேண்டும்? என் கணவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய செக்ஸ் தேவைகளைப் பூர்த்தி செய்வது மனைவியாகிய என்னுடைய கடமை. ஒரு வேளை நான் பூர்த்தி செய்யத் தவறி விபரீதம் நிழந்தால் நான்தானே பொறுப்பு ஏற்கவேண்டும்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு என் கணவர் அதற்காக என்னை எவ்வளவு நேசித்தாரென்பது எனக்குத்தான் தெரியும். உடல் தேவை பூர்த்தியாகாமல் ஆண் - பெண் உறவு உறுதி பெறாது.

அவருக்கு நான் இன்பம் கொடுத்தேன் என்பது மட்டுமல்ல, அவரிடமிருந்து நான் இன்பத்தைப் பெற்றுக் கொண்டேன்.

உங்கள் கணவர் பசித்திருந்தால் நீங்கள் பார்த்திருப்பீர்களா? வயிற்றுப் பசியை அவர் பலர் முன்னிலையில் வெளியிட்டுவிட முடியும். உடல் பசியை இவர் எவ்வாறு

www.indianguide.in

www.anybook.in

வெளியிடுவார். குறிப்பால்தான் உணர்த்துவார். அதை உணர்ந்து சாமர்த்தியமாக நடந்து கொள்வது ஒரு பெண்ணின் கடமை.

அதனால்தான் இந்த விஷயத்தில் இடம் காலம் என்பது ஒரு தடையாகி விடக்கூடாது. வயிற்றுப் பசி உடலைத்தான் களைப்படைக் செய்யும். செக்ஸ் பசி மனச் சோர்வை உண்டாக்கும். வாழ்க்கையை வெறுக்கத் தூண்டும். தவறான பாதைகளுக்கு வழி காட்டும். மன ஆரோக்கியத்தைக் குறைக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இன்பம் அனுபவிக்கும் வாய்ப்பை நழுவ விடுவது எந்த வகையில் பார்த்தாலும் புத்திசாலித்தனமல்ல.

எனக்கு இடம் முக்கியமில்லை. இன்பம்தான் முக்கியம். இது என்ன தத்துவம் என்கிறீர்களா?

இந்தத் தத்துவ விளக்கத்தை அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன்,

9. ஓடும் ரயிலில்...

பிரயாணங்களில் செக்ஸ் அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? தேன் நிலவு என்று சொல்கிறார்களே, இதைப் பற்றி நான் அடிக்கடி சிந்திப்பது உண்டு. எங்கள் திருமணத்திற்குப் பிறகு தேன் நிலவுக்கென்று நாங்கள் எங்கேயும் செல்லவில்லை. நாங்கள் இருந்த இடத்தைக் கொடைக்கானலாகவும் சிம்லாவாகவும் நினைத்துக் கொண்டேதான் தேன் நிலவை அனுபவித்தோம்.

என்னைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு இரவுமே எனக்குத் தேன் நிலவு இரவுதான். பயணம் செய்வதற்கு

www.indianguide.in

www.anybook.in

ஏற்படுகின்ற வாய்ப்பையெல்லாம் தேன் நிலவு அனுபவமாக ஆக்கிக் கொள்வது எனது பழக்கம். பாரதிதாசன் அவருடைய 'குடும்ப விளக்கு' என்கிற நூலில், இரவுத் தனிமையில் மனைவியை சந்திக்கும் கணவன் கூறுவதாக அழகான கவிதை வரி ஒன்றை எழுதியிருக்கிறார். 'ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும். அன்றன்று புதுமையடி ஆருயிரே நீ கொடுக்கும் இன்பம் என்றான்' என்கிறார். கணவன் தன் மனைவியிடம் ஒவ்வொரு நாளும் புது சுகத்தை அனுபவிக்கிறானாம்.

செக்ஸ் இன்பத்தை முழுமையாக உணர்ந்து எழுதியிருக்கிறார் புரட்சிக் கவிஞர். நானும் என் கணவரும் ஒவ்வொரு நாளும் புதுப்புது இன்பம் அனுபவிப்பதால். எங்களுக்கு எல்லா நாட்களுமே தேன் நிலவு நாட்கள்தாம். எல்லா இரவுகளுமே முதல் இரவுதான்.

அதனால் ஒவ்வொரு பயணத்தையும் தேன் நிலவுப் பயணமாக்கிக் கொள்வது என்னுடைய பழக்கம். இதுவே செக்ஸ் இன்பத்தையனுபவிக்கும் சரியான முறை என்பதும் என்னுடைய கருத்து.

ஒரு அனுபவத்தை நான் சொன்னால் இதற்கு முன்னாலுள்ள அத்தியாயத்தின் முடிவில் நான் சொல்லியுள்ள தத்துவத்தை நீங்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும். நானும் என் கணவரும் ஒரு நாள் வெளியூருக்குப் பயணம் புறப்பட்டோம். கிடைக்கின்ற எந்த வாய்ப்பையும் நான் வீணாக்குவதில்லை. என் கணவரும் இம்மாதிரி விஷயங் களில் பலே சில்லாடி. ரயிலில் முதல் வகுப்பில் ரிசர்வ் செய்வதென்றால், நாங்கள் இருவரும் பயணம் செய்தால் 'கூப்பே'யைத்தான் ரிசர்வ் செய்வார். அது கிடைக்கா விட்டால் பயணத்தை ஒரு நாள் ஒத்திப் போடுவாரே தவிர, வேறு விதமாகப் பயணம் செய்வது அவருக்குப் பிடிக்காது.

www.indianguide.in

www.anybook.in

கூப்பேயில் சௌகரியம் என்னவென்றால், இரண்டு பேர்மட்டும்எவருடைய இடையூறும் இல்லாமல் பிரயாணம் செய்யலாம். இந்த முறையும் நாங்கள் கூப்பேயில்தான் பிரயாணம் செய்தோம்.

இம்மாதிரிப் பிரயாணங்களின்போது தனிமையை அனுபவிக்கவும் அந்தத் தனிமையில் செக்ஸ் இன்பத்தை நுகரவும் வாய்ப்பு இருந்திருந்தாலும், இந்தப் பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவம் சற்று மாறுபட்டதென்பதால் அதைப் பற்றி நான் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ரயில் புறப்பட்டது. சற்றுநேரம் வெளியில் வேடிக்கை பார்த்தபடியே நாங்கள் பேசிக்கொண்டு அமர்ந்திருந்தோம். டிக்கெட் பரிசோதகர் வந்து செக் செய்துவிட்டுப் போனவுடன் வேறு பயணிகளின் தொந்தரவு கூடாது என்பதற்காகக் கதவைச்சாத்தித் தாழிட்டோம்.

இரவு நேரம். கருநிற வானில் நட்சத்திரங்கள் மட்டும் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. லேசான குளிர் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. ரயில் செல்கின்ற ஜிகுஜிகு ஓசை தாள சுதியோடு அமைந்திருந்தது. ஜன்னலோரமாக அமர்ந்திருந்த அவர் மடியில் தலைவைத்து நான் நீட்டிப் படுத்தேன். நீலவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் அந்தச் சிறிய அறையே கந்தர்வ லோகம் போலக் காட்சியளித்தது. எப்போதுமே செக்ஸ் உணர்ச்சி நளினமாகச் செயல்பட ஓர் இனிமைச் சூழ்நிலை தேவை. அந்தச் சூழ்நிலை அங்கே முழுமையுடன்திகழ்ந்தது.

அவருடைய கரங்கள் எனது மார்புக் கலசங்கள் மீது படியவும், ரயில் செல்லுவதன் ஏற்றத் தாழ்வுகளில் அந்த ஸ்பரிசத்தின் அழுத்தமும் வேறுபட, ஓர் இன்பம் என்

www.indianguide.in

www.anybook.in

உடலெங்கும் மெல்லிய அலைகளாகப் பாய்வதை நான் உணர்ந்தேன். கன்னங்களை அவருடைய கரங்கள் வருடிய போதும் உதடுகளின் மென்மையில் அவருடைய விரல்கள் ஊர்ந்தபோதும் உணர்ச்சி உசுப்பப்படுவதை நான் அனுபவித்தேன்.

நேரம் செல்லச் செல்ல மார்பில் விளையாடிய அவருடைய கரங்கள் மெல்ல நகர்ந்து எனது வயிற்றில் படர்ந்து இடுப்பில் சுற்றியிருந்த புடவையின் கீழே ஊர்ந்து என்து மறைவிடத்தில் மண்டியிருந்த ரோமங்களில் இழைந்த போது மெலிதாக உடலில் பரவிய அலைகள் வேகம் கொண்டு பேரலைகள் ஆகிவிட்டதை உணர்ந்தேன்.

அதற்குக் கீழேயும் அவரது நளின விரல்கள் தாழ்ந்து உணர்ச்சி மொட்டைத் தொட்டபோது என் உடல் தாபத்தால் சிலிர்த்தது. கண்களை மூடிக் கிடந்தேன். விழிகள் தான் மூடியிருந்தனவே தவிர, உணர்ச்சிகள் விழிப்புக் கொண்டு நர்த்தனமாடின.

என்னையறியாமலே என் கரங்கள் உயர்ந்து அவரின் கழுத்தை வளைத்துப் பிடித்து என் பக்கம் இழுத்தன. உதடுகளின் சங்கமத்தில் நாங்கள் நெட்டுயிர்த்தபோது, அவரின் ஆண்மை உசுப்பிவிடப்பட்டு என் மீது மோதியது. திடீரென்று வேகம் கொண்டவராக அவர் என்னருகில் நீட்டிப்படுத்து என்னைத் தன்னோடு அணைத்துக் கொண்டார்.

இந்த அனுபவத்தில் புதுமை என்னவென்றால் பின்னிப் பிணைந்துவிட்ட எங்களின் ஈருடல் ஒருடல் ஆகிவிட்ட நிலையில், ரயில்பெட்டி மேலும் கீழும் அசைந்ததால் ஏற்பட்ட அதிர்வுகள் ஓர் இன்பப் பரவசத்தை உண்டாகியது ஆகும். தவிர்க்க முடியாத அடுத்தக் கட்டத்தில் அவருடைய

www.indianguide.in

www.anybook.in

வீறுகொண்ட ஆண்மை ஏங்கித் தவிக்கும் என்னுடைய பெண்மையுள் ஆக்கிரமிக்க, ரயில் பெட்டியின் அசைவுகளே ஓர் இயக்கத்தை ஏற்படுத்த, அந்த மௌனசுகத்தில் நாங்கள் மெய் மறந்தோம்.

நாங்கள் செயல்படவில்லை. ரயில்பெட்டியின் அசைவுகள் எங்களைச் செயல்படுத்திக் கொண்டிருந்தன. அதனால் எங்களுடைய கலவி நீடித்ததாகி இன்பத்தின் எல்லையும் விரிந்து பரந்தது.

அந்த சுகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அனுபவித்துதான் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு இன்ப மயக்கம் எங்களை ஆட்கொண்டுவிட்ட நிலையில் அப்படியே உறங்கிப் போனோம்.

கண் விழித்தபோதும் எங்கள் உறவுநிலை அப்படியே தான் இருந்தது. ரயில் இப்போது ஒரு பாலத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருந்ததால் அதிர்வு அதிகமாக மீண்டும் அவரது ஆண்மை விழிப்புக் கொள்ள, அவர் இயங்க, ரயில் பெட்டி இயக்க, ஏதோவொரு இன்பவெள்ளத்தில் இரு வருமே அடித்துச் செல்லப்படுவதைப் போலத் திக்குமுக்காடினோம்.

எங்கோ ஒரு ஸ்டேஷனிலே ரயில் நின்றது. அப்போது ரயிலின் மீது எங்களுக்கு வந்த கோபத்தைச் சொல்ல முடியாது.

இன்பபுரிப் பயணம் என்கிற சொற்றொடரை எங்கோ நான் படித்திருக்கிறேன். இந்தப் பயண அனுபவத்தைத் தான் யாரோ அப்படி வர்ணித்திருக்க வேண்டுமென எனக்குத் தோன்றியது.

மீண்டும் ரயில் புறப்பட்டபோது நாங்கள் இடம் மாறினோம், நான் மேலேயும் அவர் கீழேயும் இருந்தார்.

www.indianguide.in

www.anybook.in

வண்டியின் அதிர்வு இந்த நிலையில் எந்த இன்பத்தைத் தரும் என்று அறிந்து கொள்ள எங்களுக்கு ஓர் ஆசை.

அன்றன்று புதுமை என்றார் பாரதிதாசன். ஒன்றொன்றும் ஒரு புதுமைதான். முன்பெல்லாம் கொக்கோகர் போன்றவர் சொன்ன உணர்ச்சி நிலைகள் சாத்தியமா என நான் எண்ணியதுண்டு. இன்பத்தை தேடுகிறவர்கள் எதையுமே பரிசோதிப்பது தவறில்லையென்று எனக்குப்பட்டது.

கல்லூரி நாட்களில் ஆங்கிலக் கவிஞன் பைரன் எழுதியதாக சொல்லி எம்மா என்கிற கவிதை ஒன்றைக் கல்லூரி மாணவர்கள் ரகசியமாக வைத்துப் படிப்பார்கள். பைரன்தான் அந்தக் கவிதை எழுதினாரா என்று எனக்கு நிச்சயமாக தெரியாது. இலக்கிய மேதைகள் தீர்மானிக்க வேண்டிய விஷயமது. ஆனால், அந்தக் கவிதை ஆணும் பெண்ணும்கொள்கின்றஉடலுறவைப்பச்சையாகச்சித்திரிக்கிறது.

ஒரு கோச் வண்டியில் பிரயாணம் செய்யும் புதுமணத் தம்பதி ஒருவரோடொருவர் விளையாடிக் கொண்ட விளையாட்டுகளை ஒளிவுமறைவின்றி அந்தக் கவிதை வர்ணிக்கிறது. ஆண்குறி பெண்குறியின் மீது நடத்தும் தாக்குதல்களையெல்லாம் கிளுகிளுப்பூட்டும் அழகோடு அந்தக் கவிதை வர்ணிக்கிறது. அந்தக் கவிதையை கல்லூரி நாட்களிலிருந்தே நான் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன்.

நானும் என் கணவரும் இரவின் ஏகாந்தத்தில் அதைப் படிக்கும்போதெல்லாம் உணர்ச்சிப் பிழம்பாவோம். என் கணவரும் அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைச் செயல்படுத்தும் வேகம் பெறுவார்.

இடது புறமிருந்து... வலது புறமிருந்து... மத்தியிலிருந்து... கவிதை அழகாக வர்ணிக்கும். கவிதையின் வர்ணனைகள் எங்களின் செயலாகும்.

www.indianguide.in

www.anybook.in

ஒரு வேளை எம்மா என்கிற அந்தக் கவிதையை நீங்கள் படித்திருக்காவிட்டால் ஒரு இனிமையான செக்ஸ் கவிதையை அனுபவிக்கும் வாய்ப்பை இழந்துவிட்ட துரதிர்ஷ்டசாலி நீங்கள் என்றுதான் அர்த்தம்.

பொதுவாக செக்ஸ் நூல்கள் கிளர்ச்சியூட்டுகின்றன என்பது உண்மை. செக்ஸ் கிளர்ச்சி பெறுவதற்காக அற்றைப் படிப்பது தவறு என்று சிலர் சொல்வார்கள். இந்த வாதத்தை என்னால் ஏற்க முடியாது.

இந்த விஷயத்தில் என் கணவர்தான் என் ஆசான். அந்தக் கதையை அடுத்து சொல்கிறேன்.

10. படிப்பது பாபமா?

ஆரம்பத்தில் அவருக்கு செச்ஸ் கினர்ச்சியூட்டும் புத்தகங்களில் அதிக ஈடுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. காலப்போக்கில் என்னோடு சேர்ந்து செக்ஸ் புத்தகங்களை படிப்பதில் நான் காட்டிய ஆர்வத்தை அவரும் காட்ட தொடங்கி விட்டார். அதற்குப் பிறகு அந்த துறையில் அவருடைய ரசனை வேகமாக வளர்ந்துவிட்டது. அம்மாதிரி புத்தகங்களைத் தேடிப் பிடித்து சேகரிப்பதையே அவர் ஒரு பொழுதுபோக்கு ஆக்கிக் கொண்டார். அவர் ரசித்த சில புத்தகங்களை எனக்குப் படிக்க கொண்டு வந்து கொடுப்பார்.

செக்ஸ் உற்சாகம் பெறுவதற்கு எழுதப்படும் புத்தகங்களும் உண்டு. இந்தப் புத்தகங்களின் நோக்கம் தெளிவானது. படிக்கின்றவர்களிடம் செக்ஸ் கிளர்ச்சியை ஏற்படுத்துவதே இவற்றின் நோக்கம். சில புத்தகங்கள் விரசமாகவும் இருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்த வரையில் அதை ஒரு பிரச்சினையாக எப்போதுமே நான்

www.indianguide.in

www.anybook.in

www.indianguide.in

www.anybook.in

கருதியதில்லை. செக்ஸ் நடவடிக்கைகள் சிலவற்றை வக்கரித்த செயல்களாகக் குறிப்பிடுவது உண்டு.

அதாவது, மேல்நாட்டு அணுகுமுறைப்படி சில ஆண்டுகளுக்கு முன்வரை ஆண்குறி பெண்குறியோடு தொடர்பு கொள்வதை தவிர ஆணும் பெண்ணும் இந்த உறுப்புகளோடு வேறு விதமாகப் பெற முயற்சிக்கும் இன்பம் அனைத்தும் வக்கரித்த செயல்கள் எனவே வர்ணிக்கப் பட்டது. ஆனால், நம்முடைய பழங்கால செக்ஸ் இலக்கியங்கள் ஆண்குறியைப் பெண் சுவைத்தல், பெண் குறியை ஆண் சுவைத்தல் போன்ற விஷயங்களைக்கூட ஆரோக்கியமான செக்ஸ் இன்பமுறைகளாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் காட்சிகளை அப்படியே சித்திரிக்கும் சிற்பங்களும் ஓவியங்களும்கூட நம்முடைய ஆலயங்களிலே இடம்பெற்றன. நம்மைப் பொறுத்த வரையில் செக்ஸ் மனோதத்துவத்தில் முன்னேறிய எண்ணங்கள் தொன்று தொட்டே இருந்து வந்திருக்கின்றன.

இடைக் காலத்தில் நம்முடைய மனோபாவங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டபோது செக்ஸ் பற்றிய சிந்தனை களிலும் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு காலத்தில் இந்தக் காரியங்களெல்லாம் ஆரோக்கியக் குறைவானவை என்று சொல்லி வந்த மேல் நாட்டுக்காரர்கள் இப்போது இவற்றையெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட செக்ஸ் நடவடிக்கை களாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சில சமயங்களில் இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு சிரிப்பு வருவதுண்டு. படுக்கை யறைத் தனிமையில் ஒரு ஆணும் பெண்ணும் செக்ஸ் வெறியில் ஒருவரோடொருவர் பழகிக் கொண்டிருக்கும் போது சமூகம் எதை ஏற்றுக் கொண்டிருக்கிறது, எதை ஏற்றுக் கொள்ளவில்லை என்கிற ஆராய்ச்சியிலா ஈடுபட்டுக்

www.indianguide.in

www.anybook.in

கொண்டிருப்பார்கள்? சமூகம் இங்கே பிரச்சினையேயில்லை. அவனும் அவளும் எதை விரும்புகிறார்கள். எது அவர்களுக்கு இன்பமளிக்கிறது என்பது மட்டுமேதான் அவர்களின் கவனத்தில் இருக்க முடியும்.

ஒரு விஷயத்தில் நான் மிகுந்த தெளிவுடன் இருக்கிறேன். ஆணையும் பெண்ணையும் படைத்த இறைவன் அற்புதமான இன்பப் பகுதிகளையும் அவர்கள் உடலில் படைத்திருக்கிறான், அதைத் தேடிக் கண்டுபிடித்து மனிதன் அனுபவிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறான். பிடிக்காததை அவன் செய்வதில்லை. பிடித்ததை அவன் செய்கிறான். இதில் சரி, தவறு என்கிற வாதம் அர்த்தமில்லாதது.

ஆனால், ஆணும் பெண்ணும் இணைந்து செக்ஸ் இன்பத்தைப் பெற வேண்டியிருப்பதால் அவர்கள் செய்கின்ற காரியம் இருவருக்குமே பிடித்தமானதாக இருப்பது அவசியமாகிறது. ஒருவருக்குப் பிடித்து ஒருவருக்குப் பிடிக்காவிட்டால் வற்புறுத்தி இன்பங்காண முயல்வது ஒருதலை இன்பமாகி விடும். இது சரியல்ல.

சில சமயங்களில் ஆணோ பெண்ணோ அறியாமை காரணமாக அல்லது ஏற்கெனவே கொண்டுள்ள தவறான எண்ணங்களின் காரணமாகச் சில விஷயங்களை ஒதுக்க முன் வரலாம். இந்தச் சந்தர்ப்பங்களிலும் வற்புறுத்தல் என்பது விரும்பக் கூடியது அல்ல. ஒருவர் இன்னொருவரை மனமாற்றம் செய்வதற்கு வேண்டுமானால் முயற்சிக்கலாம். இங்கேதான் செக்ஸ் இலக்கியங்களின் பங்கு முக்கியத்தும் பெறுகிறது. செக்ஸ் அறிவு பெற இந்த இலக்கியங்கள் துணை இருக்கின்றன...

நமது ஆலயங்களில் பல்வேறு செக்ஸ் நிலைகளைச் சிற்பங்களாகவும் சித்திரங்களாகவும் உருவாக்கியவர்கள்

www.indianguide.in

www.anybook.in

செக்ஸ் கல்வி புகட்ட வேண்டுமென்கிற நோக்கத்தோடுதான் அதைச் செய்திருக்க வேண்டும்.

இதைப் புனித இடங்களிலேயே அவர்கள் உருவாக்கினார்கள் என்பதிலிருந்து, இந்தச் செயல்களின் புனிதத் தன்மையை உணர்த்தவே அவர்கள் அவ்வாறு செய்திருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. இம்மாதிரி விஷயங்களைப் படங்கள் வாயிலாகவும் எழுத்து மூலமாகவும் எடுத்துச் சொல்லும் புத்தகங்களும் இதே காரியத்தைத்தான் செய்கின்றன. அவை மட்டும் எப்படி ஆபாசமாகும் என்பது எனக்கு விளங்கவில்லை.

பழங்கால மன்னாகளும் பிரபுக்களும் செக்ஸ் இலக்கியங்கள் தேவை என்பதற்காகவே புலவர்களை பெரும்பொருள் கொடுத்து சிற்றின்ப இலக்கியங்களை உருவாக்கச் சொல்லியிருக்கிறார். கூளப்ப நாயக்கன் காதல், கொக்கோகம் போன்றவை இவ்வாறு தோன்றியவை என்றே சொல்லப்படுகிறது. நமது புராண இதிகாசங்களிலும் செக்ஸ் நிகழ்ச்சிகள் தெளிவாக இடம்பெற்றிருக்கின்றன. ஆகவே செக்ஸ் என்பது வாழ்க்கையில் மிகப் பெரிய முக்கியமான மைய விஷயம் என்பதால், அதை மக்களுக்குச் சொல்லவும் அதன் நுணுக்கங்களை மக்களுக்குப் புலப்படுத்தவும் புத்தகங்கள் வெளிவருவது தவிர்க்க முடியாதது. தேயானதும் கூட.

எனவே என் கணவர் இது சம்பந்தப்பட்ட புத்தகங்களை தேடிப் பிடித்து வாங்கி வந்தபோது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நாங்கள் அறிந்திராத பல செக்ஸ் இன்பங்களை அவற்றிலிருந்து தெரிந்து கொண்டோம். அவற்றைப் புரிந்து நாங்கள் அனுபவித்தபோது செக்ஸ் இன்பத்தில் புதுப்புது சுவை காணும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது.

www.indianguide.in

www.anybook.in

செக்ஸ் உறவில் புதிய போக்குகளையும் மனோதத்துவ இயல்புகளையும் சித்திரிக்கும் நாவல்கள் ஆங்கிலத்தில் நிறையவே வெளிவந்திருக்கின்றன. வாழ்க்கையில் நமது மனோபாவங்கள் செக்ஸ் தேவையை ஒட்டியே உருவாவதாகவும் மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே செக்ஸ் இன்பப் பூர்த்தி என்பது ஒரு மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குக்கூடத் தேவையான ஒரு அம்சமாகி விடுகிறது.

செக்ஸ் சுவை நிரம்பிய புத்தகங்களைப் படிப்பதை எவரும் தடுத்து விட முடியாது. அப்படித் தடுத்தால் திருட்டுத் தனமாகப் படிப்பார்கள். அதாவது குற்ற உணர்ச்சியோடு படிப்பார்கள். ஆரோக்கியமான ஒரு விஷயத்தை குற்ற உணர்ச்சியோடு படிப்பது எப்படிப் பார்த்தாலும் சமூகப் பாதுகாப்புக்கு உகந்ததாக இருக்க முடியாது.

நானும் என் கணவரும் சில செக்ஸ் விஷயங்களை ஒன்றாகவே படித்து ரசிப்போம். சில படங்களை இருவருமே சேர்ந்து பார்த்து மகிழ்வோம். சில செக்ஸ் நூல்களைப் படிக்கும்போது அவற்றிலுள்ள வாசகங்களும் வர்ணனைகளும் செக்ஸ் கிளர்ச்சியைத் தூண்டுவதும் உண்மையே. தூண்டி விட்டுப் போகட்டுமே. சில சமயங்களில் ஆணோ பெண்ணோ இந்தத் தூண்டுதலைப் பெறத் தவறிவிடும்போது அது எவ்வளவோ விபரீதங்களைத் தாம்பத்திய வாழ்க்கையில் ஏற்படுத்தி விடுகிறது. ஆகவே செக்ஸ் உணர்ச்சி தூண்டப்படும் போது இன்பம் அனுபவிப்பதிலும் தனி உற்சாகம் ஏற்படுகிறது.

பைரனின் எம்மா கவிதையை நாங்கள் இருவரும் படிக்கப் படிக்க அவர் ஆண்மை வெறி கொண்டார். நான் பெண்மை வேகம் பெற்றேன். எம்மாவும் அவள் கணவரும் புதுமணத் தம்பதிகள். அந்தப் பெண்ணிடம் அவன் நடத்தும்

www.indianguide.in

www.anybook.in

காம விளையாட்டுகளைப் படித்துப் படித்து அது போன்ற விளையாட்டுகளை நாங்களும் நடத்திப் பார்த்தோம். அதுவே ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது.

எம்மாவும் அவள் கணவனும் கூச்சமின்றிப் பேசிக்கொள்ளும் பேச்சுகள் செக்ஸ் உணர்ச்சியை கிளர்ந்த தெழச் செய்யும் பேச்சுகள் என்பதில் சந்தேகமில்லை. உதாரணத்துக்கு ஒன்று. எம்மாவின் பெண்குறிக்குக் கவர்ச்சியான பெண் பெயர் ஒன்றைச் சூட்டியழைக்கிறான் கணவன். அதுபோலவே கணவனுடைய ஆண்குறிக்குத் தனக்குப் பிடித்தமான பெயர் ஒன்றைக் சூட்டி அழைக்கிறாள் எம்மா. இரண்டு பெயர்களும் அவர்களுக்கு மட்டுமே எதை குறிக்கின்றன என்பது தெரியும்.

மற்றவர்கள் முன்னிலையிலும் வேறு ஏதோ இரண்டு நபர்களைக் குறிப்பிடுவது போல அவர்கள் பரிபாஷையில் தங்களின் காம வேட்கையினை வெளியிட்டுக் கொள்ளும் இடங்கள் ரசிக்கத்தக்கவை. அதுவே படிக்கின்றவர்களிடம் செக்ஸ் எழுச்சியை தூண்டும் விதத்தில் அமைந்துள்ளன என்பது உண்மை.

இம்மாதிரிப் படைப்புகளை சிற்றின்ப இலக்கியங்கள் என்று தமிழ் இலக்கிய மரபு ஏற்றுக்கொண்டுள்ளது. எம்மாவில் பயன்படுத்தப்பட்டுள்ள பரிபாஷை முறை இளம் தம்பதியருக்கும் எவ்வளவோ உபயோகமாயிருக்கும்.

ஆங்கிலத்தில் D.H. லாரென்ஸ், ஹென்றி மில்லர், நார்மன் மெய்லர், ஜீன் ஜெனட் போன்றோர் செக்ஸ் மனோதத்துவத்தை மையமாகக் கொண்டு சர்ச்சைக்குரிய நாவல்களை எழுதிய பிரபல ஆங்கில நாவலா சிரியர்களாவார்கள். இந்த நாவல்கள் வெளிவந்த காலத்தில் சமூகத்தில் இவையெல்லாம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தின.

www.indianguide.in

www.anybook.in

ஆனால், இந்த நாவல்களில் இவர்கள் உருவாக்கிய அழுத்தமான பாத்திரப் படைப்பும், கையாண்ட இலக்கிய நடையும் ஆரம்பத்தில் தோன்றிய எதிர்ப்புகளையெல்லாம் தவிடுபொடியாக்கி இலக்கியத்தில் இவர்களுக்கு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டது. இப்போதெல்லாம் இவர்கள் எழுதிய பெரும்பாலான நாவல்கள் இந்தியாவில் தாராளமாகவே கிடைக்கின்றன.

வாய்ப்பு ஏற்படும்போது நூல் நிலையங்களிலிருந்து கூட இவற்றை எடுத்து நீங்கள் படிக்கலாம். இந்த நாவல்கள் ஆண் - பெண்கள் கொண்ட உறவுமுறைகளையும் அதன் விளைவாக ஏற்படுகின்ற மனப் போராட்டங்களையும் அருமையாகச் சித்திரிக்கின்றனர். செக்ஸ் நிகழ்ச்சிகளை அவர்கள் வெளிப்படையாகவே வர்ணிக்கிறார்கள். பொழுது போக்கிற்காகவும் இவற்றைப் படிக்கலாம். செக்ஸ் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்காகவும் இவற்றைப் படிக்கலாம்.

லோலிதா என்றொரு நாவல் உலகமெங்கும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. எழுதியவர் ரஷிய எழுத்தாளர். ரஷியாவிலிருந்து அமெரிக்காவைச் சென்றடைந்து அங்கு குடியுரிமை பெற்றவர். இந்த நாவலில் வரும் கதாநாயகனுக்கு ஐம்பது வயதுக்கு மேலாகிறது லோலிதா என்கிற ஒரு சிறுமியிடம் அவனுக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்படுகிறது. அந்த ஈடுபாடு முடிவில் எவ்வாறு செக்ஸ் உறவாக மலர்கிறது என்று சித்திரிப்பதுதான் நாவல். இந்த நாவல் மக்களின் ஒழுக்கத்தையே கெடுத்துவிடும் என்று பெரிய எதிர்ப்பு கிளம்பியது. எதிர்ப்புகளையும் மீறி நாவல் வெளிவந்து இந்த எதிர்ப்பின் காரணமாகவே பல லட்சம் பிரதிகள் விற்பனையாயிற்று.

அந்த நாவல் வெளிவந்து பல ஆண்டுகளாகி விட்டன, மனித சமுதாய ஒழுக்கம் எப்போதும் போலத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

www.indianguide.in

www.anybook.in

சில விஷயங்களை நாம் ஏற்கெனவே ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களின் காரணமாக எடுத்த எடுப்பிலேயே புறக்கணித்து விடுகிறோம். செக்ஸ் ஆரோக்கியம் பெறுவதற்கு முதல் படி செக்ஸ் அறிவு பெறுவதுதான். மனோதத்துவம் ஒரு விஞ்ஞானமாக வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் செக்ஸ் மனோதத்துவத்தின் முக்கியத்துவத்தை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

ப்ரியா என்கிற நான் ஒரு எழுத்தாளரல்ல. என்னுடைய முதல் புத்தகம் 'ஒரு பெண்ணின் அந்தரங்கக் குறிப்புகள்' என்பதாகும். அதில் என்னுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றவர்களுக்கும் பயன்படும் என்பதற்குத்தான் என் கணவரோடு முதல் சில தினங்களில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், என் கணவரிடம் இருந்த சில குறைபாடுகளை நீக்கி அவரிடம் முழுமையான செக்ஸ் இன்பம் பெறுவதற்கு நான் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஒளிவு மறைவின்றி எழுதினேன்.

அந்தப் புத்தகத்தைப் பலரும் படித்து பயனடைந்த செய்தியை அறிய எனக்கு உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறது. மேற்கொண்டு எனக்கு ஏற்பட்ட இன்ப அனுபவங்களையும் அதனால் என்னிடம் தோன்றிய எண்ணங்களையும் 'ஒரு பெண்ணின் இன்ப அனுபவங்கள்' என்கிற தலைப்பில் இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ளேன்.

செக்ஸ் என்பது வானம் போல் விரிந்தது. கடல் போல் பரந்தது. எது எல்லை என்று சொல்ல முடியாது. வானமண்டலத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் இருப்பது போலவும், கடலுக்கடியில் விலை உயர்ந்த முத்துக்கள் இருப்பது போலவும் செக்ஸ் என்பதை ஆராய, ஆராய அங்கே புதுப்புது உலகங்களைக் காண முடியும். எத்தனையோ இன்ப முத்துக்களைக் கண்டெடுக்க முடியும்.

www.indianguide.in

www.anybook.in

அன்புச் சகோதரிகளுக்கு என்னுடைய வேண்டுகோள் இதுதான். பெண் என்பவள் ஆண் என்பவனுக்கு இன்பம் கொடுக்கின்ற யந்திரம் என்று எண்ணியது அந்தக் காலம். ஆணிடமிருந்து இன்பத்தைப் பெறுவதற்கு முழுமையான உரிமை பெறுவதற்கு முழுமையான உரிமை பெற்றவள் பெண் என்கிற எண்ணம் வேரூன்றியிருப்பது இந்தக் காலம்.

ஆண்கள் ஒரு புறமிருக்கட்டும். சகோதரிகளாகிய நீங்கள் உங்கள் உடல் விலை மதிப்பில்லாத பொக்கிஷம் என்பதை முதலில் உணர வேண்டும். உங்கள் பெண்மை உறுப்பு ஒவ்வொன்றும் ஒரு இன்பச் சுரங்கம். இதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால் இன்பத்தைத் தருகின்ற வழிகளை ஆணுக்கு நீங்களே சொல்லிக் கொடுத்து விடலாம். பெரும்பாலான ஆண்கள் தங்கள் இன்பத்திலேயே நாட்ட முடையவர்களாக இருப்பதால் உடல் உறவின்போது பெண்ணுக்கு முழுமையான இன்பத்தை அளிக்கத் தவறி விடுகிறார்கள். அதை அவர்களுக்கு உணர்த்தி அவர்களிட மிருந்து முழுமையான இன்பத்தைப் பெறுவதற்கு உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது.

குழந்தை இன்பம் என்பது மகத்தான இன்பம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு பெண் தாய்மைப்பேறு அடைவது பெருமை கொள்ளத்தக்க விஷயமென்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், இவற்றோடு ஒரு பெண்ணின் கடமையும் முடிந்துவிடுவதில்லை. வாழ்க்கையும் முடிந்து விடுவதில்லை.

பெற்ற குழந்தைகளைச் சரியாக வளர்த்து போஷிக்க மகிழ்ச்சியுடன் தாம்பத்திய வாழ்க்கை இன்றியமையாதது. இப்படிப்பட்ட வாழ்க்கை அமைய வேண்டுமானால் செக்ஸ் இன்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் சமபங்கு இருக்க

www.indianguide.in

www.anybook.in

வேண்டும். இந்த சம பங்கைப் பெற பெண் முயற்சிப்பது பலவீனமுமல்ல, வெட்கப்பட வேண்டிய விஷயமுமல்ல.

பெண்மைக் கவர்ச்சி என்பது ஒரு மந்திர சக்தி. இதை உங்களுக்கு ஆண்டவன் வழங்கியிருக்கிறான். இதைப் பயன்படுத்தி ஆணை நீங்கள் வெற்றிகொள்ள வேண்டும். அது எப்பொழுது சாத்தியமாகும்? முழுமையான செக்ஸ் இன்பத்தை ஆணுக்கு நீங்கள் வழங்கும்போதுதான் சாத்தியமாகும்.

அதை எப்போது நீங்கள் வழங்க முடியும்? உங்களுடைய செக்ஸ் உறுப்புகளின் தன்மையினையும் உங்களுக்கு செக்ஸ் இன்பமளிக்கும் ஆண் உறுப்புகளின் தன்மையினையும் சரிவர அறிந்திருந்தால்தான் இதை நீங்கள் செய்ய முடியும்.

என்னுடைய இரண்டு புத்தகங்களிலும் எனது அனுபவங்களைக் கொண்டுதான் அறிந்தவற்றை உங்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த இரண்டு புத்தகங்களிலும் சொல்லாத மிக முக்கியமான சில செக்ஸ் விஷயங்களை என்னுடைய மூன்றாவது புத்தகத்தில் சொல்லப் போகிறேன். 'ஒரு பெண்ணின் ரகசிய ஆலோசனைகள்' என்பது அந்தப் புத்தகத்தின் தலைப்பு.

அதில் பெண்ணின் செக்ஸ் உறுப்புகள், ஆணின் செக்ஸ் உறுப்புகள் ஆகியவை இன்பத்தை அளிக்கும் வகையில் எவ்வாறு உருவாக்கப்பட்டன. அவற்றை எப்படிப் பயன்படுத்தினால் முழுமையான இன்பத்தைப் பெறலாம் போன்றவற்றையெல்லாம் விளக்கமாகச் சொல்ல இருக்கின்றேன்.

அதோடு இந்த இன்பங்களைப் பெறுவதற்கென்று சில பயிற்சி முறைகளும் இருக்கின்றன. அந்தப் பயிற்சிகளை நீங்களும் உங்கள் கணவரும் சரியாகச் செய்து பழகிக்

www.indianguide.in

www.anybook.in

கொண்டால் ஒருவரின் இன்பத்தை இன்னொருவர் அதிகப் படுத்துவது எளிதாகிவிடும்.

என்னுடைய புத்தகங்களின் நோக்கமெல்லாம் மிகுதியான செக்ஸ் இன்பத்தை அனுபவிக்க உங்களுக்கு உதவி செய்து உங்களின் தாம்பத்திய வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்ததாக்குவது.

நீங்கள் என்னுடைய புத்தகத்தைப் படிப்பதோடு நின்றுவிடாமல் உங்களுடைய தோழிகளுக்கும் படிக்கக் கொடுங்கள். அவர் படித்து முடித்தவுடன் பத்திரமாக வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். செக்ஸ் இன்பம் பெற வேண்டு மென நீங்கள் எண்ணுகின்றபோதெல்லாம் என்னுடைய புத்தகங்களை எடுத்துப் படிப்பது பயனுடையதாயிருக்கும். படிப்பதிலும் உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும், படித்ததை செயலுக்குக் கொண்டு வரும்போது உங்களுடைய மகிழ்ச்சி இன்னும் மிகுதியாகும்.

உங்கள் உடலெனும் வீணையை எப்படி மீட்டுவது என்று உங்கள் கணவருக்குக் கற்றுக் கொடுங்கள். ஒரு முறை அவர் வாசித்து தெரிந்து கொண்டுவிட்டால் புதுப் புது ராகங்களை எவ்வாறு தோற்றுவிப்பதென்பதை அவரே புரிந்து கொள்வார். இது ஓர் உவமைதான். வீணையின் எந்தத் தந்தியிலிருந்து என்ன ஸ்வரத்தை எழுப்புவது, எப்படி எழுப்புவது, எப்போது எழுப்புவது என்பதையெல்லாம் என்னுடைய அடுத்த புத்தகத்தில் விரிவாகச் சொல்லுகிறேன்.

அதுவரை நீங்களும் உங்கள் கணவரும் மஞ்சத்தில் சயனித்து இன்ப கேளிக்கைகளில் ஈடுபட்டு செக்ஸ் சுகத்தை முழுமையாக அனுபவிக்க என்னுடைய நல் வாழ்த்துகள்.

வாழ்க செக்ஸ்! வளர்க இன்பம்!

(முற்றும்)

www.indianguide.in

www.anybook.in

www.indianguide.in


343549